වාර්ෂික වාර්තාව 2011

කළමනාකරණ පශ්චාත් උපාධි ආයතනය

ශ්‍රී ජයවර්ධනපුර විශ්වවිද්‍යාලය

ஆண்டறிக்கை 2011

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# Annual Report 2011

## POSTGRADUATE INSTITUTE OF MANAGEMENT

University of Sri Jayewardenepura

# ஆண்டறிக்கை

# 2011

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# அறிமுகம்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஓரளவு சுயாதீனத்தன்மையுள்ள அமைப்பாகும். அதன் நோக்கங்களாக பல்வேறுபட்ட முகாமைத்துவ, நிருவாக கற்கைகளின் கிளைகளில் பட்டப்பின்படிப்பு அறிமுகம், பயிற்சி, ஆராய்சசி அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதனூடாக இலங்கையில் முகாமைத்துவத்துறையில் உயர்கல்வி, தொழில்வாண்மைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதாகும். இன்று அது தொழில்சார் முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியின் தேசிய நலன்களில் பரந்த அளவில் பணியாற்றி ஆயிரக்கணக்கான சிரேட்ட மட்ட முகாமையாளர்கள், நிருவாகிகளுக்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்திக்கான சவால்மிக்க வாய்ப்புகளை வழங்குகின்றது. இலங்கையில் உயர் முகாமைத்துவ கல்வித்துறையில் முன்னோடியாக இருந்து ப.மு.நி புத்தாக்க மற்றும் பரப்புகை முகாமைத்துவ அனுபவ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் உயர் கற்றல் மாற்றிடுகளை தேடுபவர்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்கி நிற்கின்றது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழான கட்டளைச்சட்டதினால் 1986 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட மு.ப.நி. இலங்கை பல்கலைக்கழக முறைமையில் காணப்படுகின்ற ஏழு பட்டப்பின்படிப்பு நிறுவகங்களில் ஒன்றாக இருக்கின்றது. ஒப்பீட்டு ரீதியில் இது வயது குறைந்ததொன்றாக இருப்பினும் நிறுவகங்களுக்கிடையில் இது அதிக மாணவர் சனத்தொகையை கொண்டதாக இருப்பதோடு நாட்டின் பல்கலைக்கழக முறைமையில் ஒரேயொரு சுய நிதியிட்ட உயர் கற்றல் நிறுவனமாக திகழ்கின்றது.

நிறுவகத்தின் வரலாறானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவொன்று தாபிக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டைப் பின்னோக்கி செல்கின்றது. பிரிவானது இரண்டு கனேடிய பல்கலைக்கழகங்களுடன் – ஒட்டாவா பல்கலைகக்ழகம், மற்றும் காலிடன் பல்கலைகக்ழகம் – இணைந்து சீடா நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவத் துறையில் பட்டப்பின்படிப்பு கற்கைகளை ஆரம்பித்தது. 1986 ஆம் ஆண்டில் பிரிவானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கீழ் தனியான நிறுவகமொன்றாக தரமுயர்த்தப்பட்டது. 1995 ஆம் ஆண்டில் நிறுவகமானது கொழும்பு 8, லெஸ்லி ரணகல மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

## நோக்கம்

ஐந்து வருட காலப்பிரிவில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணியானது தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் முகாமைத்துவ துறையில் கீர்த்திமிக் மத்திய நிலையமொன்றாக மாறுவதற்கான அதன் அபிலாசையினால் உந்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் முகாமைத்துவ துறையில் உயர் கல்வியை வழங்கி அபிவிருத்தி செய்வதற்கான கீர்த்திமிக்க மத்திய நிலையமொன்றாக மாறுவதற்கான நிறுவகத்தின் இதுவரையான முன்னேற்றத்தை தொடர்ந்த தர்க்கரீதியான நிலைப்பாடே இதுவாகும். நிறுவகத்திற்கான அடுத்த கட்ட அபிவிருத்தியானது பிராந்தியத்தில் முகாமைத்துவ துறையில் சிறப்பு பெறுவதற்கான அதன் அர்பணிப்பாணிப்பாகும்.

## பணிக்கூற்று

நோக்கு, முயற்சி, எளிமை, வரையறை மற்றும் கவனிப்பு போன்ற ஐந்துவகை பாதைகளினூடாக முகாமைத்துவ கல்வி, புத்தாக்கத்தை வடிவமைப்பதாகும். எமது பணி இந்த ஐந்து பாதையிலும் தமது ஆண்கள் மற்றும் பெண்களது சக்திகளை வழிப்படுத்தக்கூடிய தலைவர்களை விருத்திசெய்து சமுதாயத்தின் நன்மைக்காக தமது தொழில்முயற்சிகளில் பெறுமானங்களை உருவாக்குகின்ற முகாயையாளர்களை தயார்படுத்துவதாகும்.

## பெறுமானங்கள்

நவீன காலத்தில் நாகரீகமடைந்த மனித முன்னேற்றமானது பின்வருவனவற்றை வேண்டி நிற்கின்றது என்பதை மு.ப.நி முழுமையாக நம்புகின்றது:

- செயற்பாட்டு கற்றலினூடாக பலமாக ஆதரவளிக்கப்பட்ட அறிவு ரீதியான கல்வி
- செயலாற்றுகைக்கான திறனின் தொடரான அபிவிருத்தி
- ஒழுங்கமைக்கப்பட்ட தொழில்வாண்மைக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு
- பெறுமான உருவாக்கத்தின் நோக்கத்திற்கான புத்தாக்கத்திற்கான அர்ப்பணிப்பு

நிகழ்ச்சித்திட்டதின் கருத்தியலில் நான்கு கூறுகள் உள்ளன. நிறுவனத்திற்கு நுழையும் அனைவரும் இதனால் வார்க்கப்படவேண்டுமென நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட நன்மைகள் ஐந்து-முனை கூட்டாண்மை பெறுமான முறையினால் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

- நாம் செய்கின்ற அனைத்து விடயங்களிலும் நடுநிலைமை வகித்தல்
- பெறுமானமிக்க அறிவார்ந்த உருவாக்கத்தில் உற்சாகத்துடன் இருத்தல்
- அறிவுபெறுதல், பரப்புகையில் படைப்பாற்றல்தன்மை
- நாம் செய்கின்ற அனைத்து விடயங்களிலும் தொடரான மேம்பாடு
- எமது அனைத்து தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளிலும் நேர்மைத்தன்மையும் வெளிப்படைத்தன்மையும்

## இலக்குகள்

அடுத்த ஐந்து வருடங்களுக்கான மு.ப.நி.நான்கு-முனை கூட்டாண்மை இலக்குகள் பின்வருமாறு:

- நிறுவகம் தொழிற்படுவதற்கு விரும்புகின்ற சந்தைகளில் போட்டியை முறியடித்து, முன்னணியில் தொடர்ந்தும் இருத்தல் - தேசத்தின் வியாபார பாடசாலையாக தொடாந்தும் இருத்தல்
- முகாமைத்துவ கற்கையின் வளர்ந்துவருகின்ற துறைகளுக்கு கற்கையின் தேசிய நீரேட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் அதை விரிவுபடுத்தி நிறுவகத்தின் பொருத்தப்பாட்டை அதிகரித்தல்
- அமைப்பின் நடத்தையூடாக தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்துதல் - குறிப்பான, குறுங்கால நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் தொடராக அதிகரித்தல்

## பணிப்பாளரின் மீளாய்வு

முப்பது வருடங்களுக்கு முன்னர் உயர் மட்டத்தில் முகாமைத்துவ கல்வி பற்றி நாட்டில் சிறியளவான கவனம்செலுத்தப்பட்ட பின்னணியில் மு.ப.நி அதன் ஆரம்ப பணிப்பாளரின் தலைமையில் பட்டப்பின்படிப்பு கற்கைகள் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டதினூடாக இலங்கைக்கான முகாமையாளர்களை விருத்திசெய்கின்ற தேசிய பணிக்கு காலடியெழுத்துவைத்தது. இதில் அரசாங்கமோ அல்லது தனியர் துறையோ ஆர்வம் காட்டவில்லை. ஆதலால் ஆரம்ப பணிப்பாளர் இலங்கையில் எம்பீஏ பட்ட பாடநெறியான்றை தாபிப்பதற்கான உதவியை பெற்றுக்கொள்வதற்காக கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். 1980 களின் ஆரம்பத்தில் நாட்டில் தனியுரிமை சந்தைவாய்ப்பு அப்போது உருவாக்கப்பட்டது. தற்போது சுமார் 30 வருடங்களின் பின்னர் சந்தை மிகவும் வித்தியாசமானதாகவும் போட்டித்தன்மைகொண்டதாகவும் உள்ளது.

இன்று நாட்டிலுள்ள எட்டு பல்கலைக்கழங்கள் எம்பீஏ மற்றும் அதேபோன்ற உயர் பட்ட பாடநெறிகளை வழங்குகின்றன. இந்த பாடநெறிக்கு வெளிநாட்டு நிதிகளை பயன்படுத்தி வெகுவாக விளப்பரப்படுத்தப்படுவதோடு அவற்றின் எம்பீஏ பாடநெறிகளுக்காக மு.ப.நி. அறவிடுகின்றதைப் போல இருமடங்கு மிகை கட்டணங்களை அறவிடுகின்றன. போட்டித்தன்மையானது நுழைவு தகைமைகளை குறைத்தல், வருகைதரு விரிவுரைகளுக்கு உள்ளூர் பல்கலைகழக பீடத்தை பயன்படுத்துதல் , இவர்கள் சொல்லிக்கொள்கின்ற 'சிறப்புமிகு" பெயர்கள், குறிப்பாக எமது சுயமானதை விட வெளிநாட்டிலிருந்து வரும் எந்தவொன்றும் மேலானது என்ற அவர்களது தங்கியிருக்கும் சிந்தனை நம்பிக்கையிலாகும் போன்ற விடயங்களிலிருந்தே போட்டித்தன்மை எழுகின்றது.

மேற்படி நிலைமையானது தனது சுய நிதியில் இயங்குகின்ற மு.ப.நி. பாரிய சவாலொன்றை முன்வைக்கின்றது. தனியார் நிறுவனங்கள் மு.ப.நி . உட்படுகின்ற சம்பள வரையறைகள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கு உட்படுவதில்லை. மேலும் மு.ப.நி. சம்பளங்கள், மின்சார கட்டணங்கள், காப்பறுதி, வரிகள், வருகைதரு விரிவுரையாள்கள், மற்றும் கட்டட பராமரிப்பு, பராமரிப்பு, கருவி, வழங்கல்கள், போக்குவரத்து மற்றும் கணக்காய்வு கட்டணங்கள் போன்றவற்றிற்கான கொடுப்பனவுகளுக்காக நிதிகளை உழைக்க வேண்டியிருக்கின்றன இது இலங்கை அரசாங்கத்தில் ஒரு தனித்துவமான நிலையாகும். இங்கு அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது சம்பளங்களை தாமே உழைத்து 26 ஊழியர்களுடன் கூடிய நிறுவனத்தை நடாத்திச்செல்ல வேண்டியிருக்கின்றது.

இவ்வாண்டுக்காலப்பிரிவில் மு.ப.நி. 2009 -2011 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டாண்மை திட்டத்தின் அடிப்படையில் முகாமைத்துவ சபையினால் வழிகாட்டப்பட்டது. ஆராய்ச்சி, பட்டக் கல்வி, பயிற்சி மற்றும் உசாவுகை சேவைகள், புதிய கல்வி முன்னெடுப்புகள், போன்ற முக்கிய பெறுபேற்று துறைகளில் முழுதுமளாவிய விளைவுகள், நிறுவகத்தின் சுய நிதியிடப்பட்ட அந்தஸ்தை பேணுவதற்கு வருமானத்தை உழைப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றது.

## அடைவுகள்:

எமது நோக்கங்களாக பல்வேறுபட்ட முகாமைத்துவ, நிருவாக கற்கைகளின் கிளைகளில் பட்டப்பின்படிப்பு அறிமுகம், பயிற்சி, ஆராய்ச்சி அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதனூடாக இலங்கையில் முகாமைத்துவத்துறையில் உயர்கல்வி, தொழில்வாண்மைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதாகும்.

இன்று அது தொழில்சார் முகாமைத்துவ கல்வி மற்றும் பயிற்சியின் தேசிய நலன்களில் பரந்த அளவில் பணியாற்றி ஆயிரக்கணக்கான சிரேட்ட மட்ட முகாமையாளர்கள், நிருவாகிகளுக்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்திக்கான சவால்மிக்க வாய்ப்புகளை வழங்குகின்றது.

இலங்கையில் உயர் முகாமைத்துவ கல்வித்துறையில் முன்னோடியாக இருந்து ப.மு.நி புத்தாக்க மற்றும் பரப்புகை முகாமைத்துவ அனுபவ வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் உயர் கற்றல் மாற்றீடுகளை தேடுபவர்களுக்கும் தலைமைத்துவத்தை வழங்கி நிற்கின்றது.

தெற்காசியாவில் உயர் முகாமைத்துவ கல்வித்துறையில் முன்னோடி என்றவகையில் முகாமைத்துவத்தின் தேசிய சர்வதேச பின்னணியில் முகாமைத்துவத்தின் அறிவு மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குவதற்கு நாம் முயற்சிக்கின்றோம்.

எமது பிரதான பணி யாதெனில் நோக்கு, முயற்சி, எளிமை, வரையறை மற்றும் கவனிப்பு போன்ற ஐந்துவகை பாதைகளினூடாக முகாமைத்துவ கல்வி, புத்தாக்கத்தை வடிவமைப்பதாகும். எமது முழுதுமளாவிய பணி இந்த ஐந்து பாதையிலும் தமது ஆண்கள் மற்றும் பெண்களது சக்திகளை வழிப்படுத்தக்கூடிய தலைவர்களை விருத்திசெய்து சமுதாயத்தின் நன்மைக்காக தமது தொழில்முயற்சிகளில் பெறுமானங்களை உருவாக்குகின்ற முகாயையாளர்களை தயார்படுத்துவதாகும்.

## வசதிகளின் மேம்பாடு

மாணவர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குவதற்றாக வேண்டி இவ்வாண்டுக்காலப்பிரிவில் பின்வரும் புதிய வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- **உடலியல் பயிற்சி நிலையத்தை தரமுயர்த்ததல் -** நிறுவகத்தின் எம்பீஏ பாடநெறியை தொடரும் பல மாணவ முகாமையாளர்கள் முக்கிய ***பணி-வாழ்கை – கற்றல்*** சமநிலையை பேணமுடியாத நிலைக்கு உட்படுகின்றனர் . உடலியல் நலன் புறக்கணிக்கப்படுவதன் விளைவுகளாக அடிக்கடி அழுத்தங்களும் ஆரோக்கியமற்ற நிலையும் ஏற்படுகின்றது. மு.ப.நி. மாணவ முகாமையாளர்கள் உடலியல், உளவியல், சமூக மற்றும் ஆன்மீகம் போன்ற வாழ்க்கையின் நான்கு பகுதிகளையும் நடுநிலையில் முகாமைசெய்வது வரவேற்கப்படுகின்றது. இந்த அபிலாஷையை அடைய நிலையம் உதவுகின்றது.

இந்த நோக்கதிற்காக உடலியல் பயிற்சி நிலையம் புதிய உபகரணங்களுடன் தரமுயர்த்தப்பட்டதோடு திறக்கும் நேரங்கள் நடுநிசி 12.00 வரை அதிகரிக்கப்பட்டது.

- **இணைய அடிப்படையிலான மாணவர் முன்னேற்ற அறிக்கையிடல் முறைமை -** இணையத்தினூடாக எம்பீஏ பாடநெறி காலப்பகுதியில் மாணவர்கள் இற்றைப்படுத்திய தனிப்பட்ட கல்விசார் செயலாற்றுகையை அறிவதற்கு அவர்களுக்கு முறைமையொன்று விருத்திசெய்யப்பட்டது. ஒவ்வொரு பாடநெறியுடனும் தொடர்பாக பெற்ற புள்ளிகள், பாடநெறி சராசரி, மாணவர் தொகுதியுடன் அவர்களது நிலை என்பன அவர்கள் அனுகத்தக்க சில தகவல்களாகும். முறைமையானது இவ்வாண்டுக்காலப்பகுதியில் புதிய விடயங்களை உள்ளக்கி மேலும் மேம்படுத்தப்பட்டது.
- அலுவலக பணியின் பின்னர் மாலைநேர விரிவுரைகளுக்கு சமூகமளிக்கின்ற மாணவர் முகாமையாளர்களின் நன்மை கருதி அதிக வாகனங்களை தரித்து வைப்பதற்கான மோட்டார் வாகன தரிப்பு வசதி விஸ்தரிக்கப்பட்டது.
- விரிவுரை அறைகளும் குறிப்பாக பீட கூடங்களும் புத்தாக்கம் செய்யப்பட்டன. மாணவர் கற்கை பகுதிகளுக்கும் இரண்டு விரிவுரை அறைகளுக்குமாக புதிய கதிரைகள் / மேசைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- விரிவுரை அறைகளிலுள்ள பழைய ஒலி முறைமை நவீன கருவிகளுடன் கூடிய ஒலி முறைமையினால் பதிலீடு செய்யப்பட்டது
- கட்டடம் வர்ணப்பூச்சு பூசப்பட்டு பராமரிப்பு செயற்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது
- மாணவர் கற்றல் நுழைவாயிலினூடாக மாணவர்கள் தமது நாளாந்த வரவு வீதத்தை பார்ப்பதற்கு ஏற்றவகையில் மாணவர் வருகையின் மூலமான பதிவுக்கான தேவையை அகற்றி தன்னியக்கமயப்படுத்தப்பட்ட குறியீட்டு முறைமை மேலும் தரமுயர்த்தப்பட்டது
- இவ்வாண்டுக்காலப்பகுதியிலும் பீட அங்கத்தவர்களின் இணையவழி மாணவர் மதிப்பீடு, பாடப்பரப்பு விடயங்களின் இணைய பதிவேற்றுகை, மாணவர் பாடநெறி புள்ளிகளின் இணைய வழி இற்றைப்படுத்துகை என்பனவும் தொடர்ந்து இடம்பெற்றது
- அவசர விடயங்களின்போது மாணவர்களுடன் தொடர்பாடுவதற்கான மொத்தமான குறுஞ்செய்தி முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## பயிற்சியும் உசாவுகை சேவையும்

அதிக எண்ணிக்கையான வி.அ.நி. 2011 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன :

| | நிறுவனம் | நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|
| 1 | வ-ப பிரஜைகள் அபிவிருத்தி வர்த்தக நிதி நிறுவனம் | வங்கியின் நடுத்தர முகாமைத்துவத்திற்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 2 | ஜோன் கீள்ஸ் ஹோல்டிங் பிஎல்சி | நிறைவேற்று தரங்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 3 | மில்லேனியம் த.தொ. | உயர் முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறி |
| 4 | ஹட்டன் நஷனல் வங்கி | கிளை முகாமையாளர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் |
| 5 | டட்ச்சு வங்கி | விற்பனை பதவியினருக்கான செயலமர்வு |
| 6 | ஆதசிய போக்குவரத்து ஆணைக்குழு | பதவியினர் அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |

## பாடநெறி திட்டமிடலும் முன்வைப்பும்

போட்டித் தன்மையில் முன்னணியில் இருப்பதற்காக எம்பீஏ பாடநெறியின் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்துவதற்காக புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவ முகாமையாளர்களுக்கு பெறுமானத்தையும் வழங்குகின்றது. இவ்வாண்டுக்காலப்பிரிவில பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

அ) பாடநெறி சுருக்கங்களுடன் சிறந்த உள்ளடக்கத்தையும் தெளிவான வழிகாட்டலையும் வழங்குவதற்காக மீள்வடிவமைக்கப்பட்டன. விரிவான, தெளிவான கட்டமைக்கப்பட்ட பாடநெறியுடன் கட்டாய வாசிப்புகளின் பட்டியல்கள் (1) பாடநெறி தயார்நிலை மற்றும் முன்வைப்பு தொடர்பில் விரிவுரையாளருக்கும் (2) குறிப்பிட்ட அமர்வொன்றுக்கு முன்னதாகவே தயாரிப்பதற்கு மாணவ முகாமையாளர்களுக்கு முடியுமாக இருப்பதற்கும் உதவியளித்துள்ளது. (மாதிரி பாடநெறி சுருக்கத்தின் இணைப்பை தயவுசெய்து பார்க்கவும்)

***ஆ) முன்வைப்பு முறை:*** இரண்டு குறிப்பான மாற்றங்கள் இடம்பெற்றன. முதலாவதாக மூன்று மணித்தியாள அமர்வின் மூன்றில் ஒரு பகுதி உரிய விரிவுரையாளருக்கு வழமையாக ஒதுக்கப்படுகின்றது. அதாவது தெரிவித்தல். அமர்வின் அடுத்த பகுதி காண்பித்தலுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது (அதாவது

வீடியோ) கேட்டல் ( கலந்துரையாடல் / விவாதம்) செய்கை (பயிற்சி அல்லது விடய ஆய்வு). பீடமானது மாணவ முகாமையாளர்கள் தொடர்பான சாதகமான தாக்கமொன்றை உருவாக்குவதற்கு அனைத்து நான்கு வழிகளையும் பயன்படுத்துவதற்கான தேவையை அறிந்துள்ளதோடு தேவையான கற்றல் பெறுபேறு அடைவதற்கான தேவையை அறிந்துள்ளது.

***இ) சிறப்பு விரிவுரைகள்:*** தெரிவுசெய்யப்பட்ட தலைப்புகளில் சிறப்பு விரிவுரைகளை ஆற்றுவதற்காக கைத்தொழிலிருந்து பிரதான பிரமுகர்களின் பாரிய ஈடுபாடு உள்ளது. இந்த அமர்வுகள் முன்திட்டமிடப்பட்டவையாக இருப்பதோடு பாடநெறி சுருக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு வருகைகள் பயன்மிக்கவையாக இருந்ததோடு அவர்கள் உண்மையிலேயே எமது எம்பீஏ பட்டத்திற்கும் எமது போட்டியாளர்கன் பட்டத்திற்குமிடையே முக்கிய வேறுபாடொன்றை உருவாக்கியுள்ளனர்.

**ஈ) புள்ளிகளை வெளியிடுதல்** : பீடம் உரிய நேரத்தில் புள்ளிகளை வெளியிடுவதற்கு கடைசித் திகதியொன்றை அமைத்திருக்கின்றது. இது இறுதி பரீட்சை திகதியிலிருந்து 28 நாட்களாகும். இது கவனமாக பின்பற்றப்பட்டு வருவதோடு இது பீடத்தின் கேபிஐ ஐ உள்ளடக்கி இருக்கின்றது

**உ) மாணவர் மதிப்பீடு :** பாடநெறியொன்றின் மணவர் கண்ணோட்டம் பற்றிய முக்கிமானதொரு மதிப்பீடு இதுவாகும். தனிப்பட்ட மாணவர்களின் தவணை முடிவு மதிப்பீடானது சுருக்கமாக தயாரிக்கப்பட்ட வழங்கப்படுவதோடு மாணவ முகாமையாளர்களின் கண்ணோட்டத்தின் படி சம்பந்தப்பட்ட பீட அங்கத்தவர்கள் அவர்களது செயலாற்றுகை குறித்து அறிவிக்கப்படுகின்றனர். மற்றுமொரு பீட கேபிஐ, 1-5 அளவொன்றில் 4 இன் முழுதுமளாவிய மதிப்பீடு ஒவ்வொரு பீட உறுப்பினர்களிடமிருந்தும் தேவைப்படுத்துகின்றது

மேற்குறிப்பிட்ட கேபிஐ இன் விரிவு பீடத்திற்கான 4 x 4 x 4 சூத்திரத்தை அமைக்கின்றது

4 = நான்கு முன்வைப்பு முறைகளின் கலப்பு
4 = 5 வரில் 4 மாணவர்களின் மதிப்பீடு
4= பரீட்சை திகதியிலிருந்து 4 வாரங்களிற்குள் இறுதிப் புள்ளிகள் வெளியிடப்படுதல்

பாடநெறி முன்வைப்பின் முக்கிய சிறப்பம்சம் வதிவிட செயலமர்வுகளாகும். பொதுவாக அவை நகரிலிருந்து தூரமாகி ஹோட்டல்களில் இடம்பெறுகின்றன இவ்வாண்டுக்காலப்பகுதியில் அத்தகைய மூன்று செயலமர்வுகள் இடம்பெற்றன. இந்த செயலமர்வுகள் குழு அமைப்புகளில் படைப்பாற்றல் தன்மையை

ஊக்குவிக்கின்ற வகையில் அமைதியான சூழலொன்றில் சில மொடியுள் கீழ் தெரிவுசெய்யப்பட்ட விடயங்களை பரிசோதிப்பதற்கு மாணவர்களுக்கும் பீடத்திற்கும் உதவுகின்றன.

## வருடாந்த பீட ஓய்வுகாலம்

நிறுவகத்தின் வருடாந்த பீட ஓய்வுகாலம் கண்டி ரீ ஒப் லைப் ஹோட்டலில் 2011 ஒக்டோபர் 15, மற்றும் 16 ஆம் திகதிகளில் இடம்பெற்றது

பீட ஓய்வுதின வைபவத்தின் பிரதான நோக்கம் யாதெனில் நிறுவனத்தின் அதன் பிரதான தொழிற்பாடுகள் மற்றும் பணிகள் தொடர்பில் ழுமு வெற்றிக்காக நிறுவகத்தை எதிர்கால தேவைகளுக்கு தலைமைவகித்து சமகால தேவைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அதை மீள்நிலைப்படுத்தி, மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டுள்ளது. உண்மையில் ஒரு பெறுமதிமிக்க பீட ஓய்வு.. கல்விச் சமுதாயத்திற்கு புதிய உயிர்கொடுத்து சுவாசிக்க வைக்கும் அத்துடன் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட நிறுவனத்தின் அடையாளத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்து பகிர்ந்துகொண்ட உணர்வு பிதிபலிப்பை வழங்கி முன்னோக்கி நகர்த்தமுடியும். இதுவே பீட ஓய்வு நிகழ்வின் நோக்கமாகும்.

### அபிவிருத்திக்கான 5 எம் (M) சட்டகம்.

எதிர்வரும் வருடங்களில் மு.ப.நி முன்னேற்றப் பாதையில் எடுத்துச்செல்வதற்காக ஐந்து பரிமாணம் கொண்ட செய்திட்டமொன்று பின்பற்றப்பட்டுள்ளது. 5 எம் (M) சந்தை, அங்கத்தவர் (பீட மற்றும் பதவியினர்) ஆலோசகர்கள் (பின்னூட்டல் மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட பீடம்) ஆலோசகர்கள் (ஒவ்வொரு தொகுதிக்குமான மாணவர் கண்காணிப்பாளர்கள்) மற்றும் எம்பீஏ (பழையமாணவர்) என விபரிக்கப்பட்டுள்ளது.

### மு.ப.நி. ஐஎஸ்ஓ 9001 -2008 . அந்தஸ்து

நிறுவகத்திற்கான ஐஎஸ்ஓ 9001 -2008 . அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பதவியினர் ஐஎஸ்ஓ தேவைப்பாடுகள் தொடர்பான ஆரம்ப செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

## மு.ப.நி. கட்டட கருத்திட்டம் -II

மு.ப.நி. கட்டிடத்தின் கட்டம் II நிர்மாணத்திற்கான கருத்திட்ட பிரேரணையொன்று தயாரிக்கப்பட்டு அங்கிகாரத்திற்காக பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டதின் மொத்த

செலவு ரூபா 171 மில்லியன்களாகும். நிறுவகம் 2012 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது கட்டிடத்தின் கணிசமான பகுதியொன்றை பூர்த்திசெய்வதற்கு நிறுவகத்தினால் உழைக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படும்.

## பட்டப்பின்படிப்பு பெறுபேறுகள்

இவ்வாண்டுக்காலப்பகுதியில் முதுமாணிப்பட்டங்கள், பட்டப்பின்டிப்புளோமா தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| வியாபார நிருவாகத்தில் கலாநிதிப் பட்டம் | 01 |
| வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டம் | 327 |
| வங்கியில், நிதியியலில் எம்பீஏ பட்டம் | 02 |
| மனித வள முகாமைத்துவத்தில் எம்பீஏ பட்டம் | 42 |
| சுங்க நிருவாகத்தில் முதுமாணிப்பட்டம் | 60 |
| பொது நிருவாகத்தில் முதுமாணிப்பட்டம் | 01 |
| பொது நிருவாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா | 01 |
| வியாபார நிருவாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா | 03 |
| வங்கியில், நிதியிலில் பட்டப்பின் டிப்ளோமா | 01 |

**மொத்த பட்டதாரிகளின் எண்ணிக்கை – 438**

இந்த பட்டதாரிகள் 2011 யூலை 21 ஆம் திகதி இடம்பெற்ற பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் தமது பட்டப்பின்படிப்பு பட்டங்களை பெற்றனர்.

## விளம்பரமும் புகழுருவும்

2011 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் அனைத்து செயற்பாடுகளையும் நிகழ்வுகளையும் விளம்பரப்படுத்துவதற்கு நியாயமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பத்திரிகைகளும் தொலைக்காட்சியும் மு.ப.நி இருப்பு நிலையை அதிகரித்து அனைத்து நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் விரிவாக உள்ளடக்கியிருந்தது. மு.ப.நி இணையத்தளம் நிறுவகத்தினால் நடத்தப்பட்ட விசேட நிகழ்வுகளை உள்ளடக்கி இருந்தது.

## ஆராய்ச்சி, வெளியீடுகள் மற்றும் நூலகம்.

ஆராய்ச்சி முகாமைத்துவம் இலங்கையில் இன்னும் ஆரம்ப மட்டதிலேயே உள்ளது. நாம் இத்துறையில் ஒரு ஆராய்ச்சி மரபை விருத்திசெய்யவில்லை

என்பதோடு எமது பிரதான ஆராய்ச்சி முயற்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டு, விருத்திசெய்யப்படக்கூடிய கருத்தியலொன்றை கண்டுபிடிப்பதற்கான உண்மையான சவாலொன்றையும் எதிர்நோக்குகின்றோம்.

ஆராய்ச்சின் பிரதான நோக்கம் (காண்புகளின் வெளியீடு) யாதெனில் முகாமைத்துவத்தை தொழிலொன்றாகவும் அறிவியலொன்றாகவும் மேம்படுத்துவதற்கான உள்ளூர் முகாமைத்துவ உள்ளடக்கத்தை ஆராய்வதாகும். நாம் ஆராய்ச்சிக்கான முறைமைகளையும் தர்க்கரீதியான அனுகுகைகளையும் தரமுயர்த்துவதற்கான வழிமுறைகளை நாடுகின்றோம். அதன்மூலம் வெளியீடுகளின் தரம் மதிக்கத்தக்க மட்டங்களுக்கு உந்துகைப்படுத்தப்பட முடியும். மு.ப.நி. ஆராய்ச்சி நோக்கங்கள் இலங்கை பின்னணியில் அறிவுத்துறையில் உள்ள முக்கிய இடைவெளிகளுக்கும் ‘அறிவை’ சமுதாய ரீதியாக பயனுள்ளதாக மாற்றுவதற்கான தேவைக்கும் பதிலளிக்கின்றது.

1996 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் காலாண்டு சஞ்சிகையான ***இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (இ.மு.ச)*** வெளியீடு, கலந்துரையாடலுக்கான மன்றமொன்றை தொடர்ந்தும் வழங்கிவருக்கின்றது. இ.மு.ச. மூன்று மேலதிக வெளியீடுகள் 2011 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டன. இ.மு.ச. பிரதான நோக்கம் முகாமைத்துவத்தில் பிரச்சினைகள், செயற்பாடுகள் அபிவிருத்தி என்பவற்றை தீர்ப்பதற்கான ஊடகமொன்றை வழங்குவதும் இத்துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கற்கையின் பெறுபேறுகளை பரப்புவதுமாகும். சஞ்சிகையானது முகாமைத்துவத் துறையில் தமது பணிகளை வெளியிடுவதற்கு புத்திஜீவிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் திறந்த களமாகவுள்ளது.

***தொழில்சார் முகாமையாளர்,*** இருவருடத்திற்கு ஒரு முறை வெளியிடப்படுகின்ற சஞ்சிகையானது இ.மு.சஞ்சிகைக்கு மேலதிகமாக நவீன முகாமையாளர்களின் வளர்ந்துவரும் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டதாகும். சந்தைக்கு தொழில்சார் முகாமையாளரை அறிமுகப்படுத்துவதற்கான நோக்கம் யாதெனில் விளங்குவதற்கு இலகுவான அமைப்பொன்றில் தெளிவான முகாமைத்துவத்தை பரப்புவதாகும். அது குறிப்பான தொழிற்பாட்டு சார்பை கொண்டதாக இல்லை. ஆனால் சிக்கலான, குழப்பகரமான சூழ்நிலையில் பணியாற்றுகின்ற நவீன முகாமையாளருக்கு சமகால, முக்கியத்துவமிக்க விடயங்களை தீர்த்துவைக்கின்றது.

வாசிப்பதற்கு இலகுவான, உள்ளடக்கத்தில் செறிவுமிக்க கட்டுரைகளின் திரட்டல் சஞ்சிகையின் மூன்றாவது இதழ் கொண்டுள்ளது.

நூலக விரிவாக்கம் 2011 ஆம் ஆண்டிலும் (வீடியோ நூலகம் உள்ளிட்ட) தொடர்ந்தது. விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டதிற்காக 2.மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

அதிக பாவனையாளர்களை கொண்டிருக்கத்தக்கவகையில் நூலகம் மேலும் தரமுயர்த்தப்பட்டதோடு பயனர்களின் சௌகரியத்திற்காக பின்வரும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன:

ஆராய்ச்சி திரட்டலும் தகவல் உதவியும்
நூலகங்களுக்கிடையிலான கடன்கள்
விடய நூல்பட்டியல் வரலாறும் காட்சிப்படுத்தல்களும்
இணைய தொடர்பும் காட்சிப்படுத்தல்களும்
தன்னியக்க நூற்பட்டியல்

2011 ஆம் ஆண்டின் இறுதியளவில் முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய துறைகளில் 30,000 புத்தகங்களும் 60 சஞ்சிகைகளும் பருவ வெளியீடுகளும் வாசகர்களுக்காக கிடைக்கப்பெற்றிருந்தன.

நூலகத்தில் ஒரு வினைத்திறனள்ள சேவையை உறுதிப்படுத்துவதற்காக நூலக நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டதின் ஓர் அங்கமாக பட்டை கறியிடப்பட்ட வினியோக முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக முன்வைப்புரை வழிகாட்டல்கள்

***முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவக முன்வைப்புரை வழிகாட்டல்கள்*** என்ற தலைப்பிடப்பட்ட கைந்நூலொன்று முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கல்விசார் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான பல்வேறுபட்ட அறிக்கைகளின் எழுத்து மற்றும் முன்வைப்பு உரையின் ஒரு சீரமைப்பைக் கொண்டுவருவதற்காக வடிவமைக்கப்பட்டது. புத்தகமானது மாணவர்களினால் உடன்பட்டு ஒழுகவேண்டிய ஒரு தொகுதி விதிகள் அல்லது வழிகாட்டல்களின் தராதரமொன்றை குறிப்பீடு செய்வதோடு இவை புகழ்பெற்ற கற்றல் அமர்வுகளின் விதிகளிலிருந்து பின்பற்றப்பட்டவையாகும். மிகவும் சிறப்பாக அவை அமெரிக்க உளவியல் சங்கத்தின் வெளியீட்டு கைந்நூலின் தொகுதியொன்றாகவும் இருக்கின்றது. இது பீட உள்ளீடாகவும் உள்ளது.

## வியாபார மற்றும் சந்தை தொடர்புகள் முகாமைத்துவ அபிவிருத்தியும் பயிற்சியும்

கொள்கை அளவில் நிறுவகமானது உள்ளடக்கத்திலும் பீடக் கற்பித்தல் திறன் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பைச் செய்யக்கூடிய வகையில் நடைமுறைசார் முகாமைத்துவ பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கத்தக்க முகாமைத்துவ ஆலோசனை செயற்பாடுகள் பொறுப்பேற்கின்றது. 2011 ஆம் ஆண்டில் கூட்டாண்மை திட்டமிடல், நிறுவன ரீதியான மீள்கட்டமைப்பு, தொழில்பகுப்பாய்வு, ஊதியம் வழங்கல் கொள்கை, பயிற்சி மற்றும் நிறுவனசார் அபிவிருத்தி போன்ற துறைகளில் அதிக எண்ணிக்கையான முகாமைத்துவ ஆலோசனைகளை வெற்றிகரமாக பூர்த்திசெய்தது.

வியாபாரச் சமூகத்தின் தொழிற்படு பங்காளரொருவராக இருக்கும் அதன் முயற்சியில் நிறுவகமானது ஊழியர்களுக்கான வாடிக்கையாளர் மையம் கொண்ட பயிற்சிகளை பொறுப்பேற்று மேற்கொள்வது அதன் மற்றுமொரு செயற்பாடாக உள்ளது. தயாரிப்பு, சேவை அதாவது வங்கியியல் விதி, காப்புறுதி மற்றும் விசேட சேவைகளின் ஈடுபடுகின்ற அரச மற்றும் தனியார் துறைகளை வாடிக்கையாளர் உள்ளடக்கும். இவ்வாண்டுக் காலப்பகுதியில் அத்தகைய செயலமர்வுகள் நிகழ்ச்சித்திட்டங்களின் பெருந்தொகையொன்று நடாத்தப்பட்டது.

## முகாமைத்துவ சபை

நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்று அமைப்பாகவுள்ள முகாமைத்துவ சபையானது இவ்வாண்டுக் காலப்பகுதியில் பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

**பேராசிரியர் உதித லியனகே,** சபையின் பணிப்பாளரும் தலைவரும்

கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் **(பிரதிநிதி, திரு.பியசேன ரணபுர)**

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் **(பிரதிநிதி, திரு.டபிள்யூ.எம்.பி.ஜி. விக்கிரமசிங்க)**

நிதி அமைச்சின் செயலாளர் **(பிரதிநிதி, கலாநிதி வீ.எம்.எஸ். படகொட)**

பணிப்பாளர் நாயகம், தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகம் **(கலாநிதி ஈ.ஏ. வீரசிங்க)**

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம், தலைவர், **(திரு. சுஜீவ முதலிகே)**

தலைவர், இலங்கை வர்த்தக சம்மேளனம் **(கலாநிதி அநுர ஏக்கநாயக்க)**

பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் **(பேராசிரியர் சம்பத் அமரதுங்க)**

பணிப்பாளர், இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம் **(திரு.பீ.விஜேரத்ன)**

**பேராசிரியர் அபேயரத்ன பண்டார,** நிதித்துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**பேராசிரியர் எச்.எச்.டி.என்.பி. ஒபாதா**, மனித வள முகாமைத்துவத் துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**பேராசிரியர் டி.ஏ. தந்திரிகொட,** புவியியல் துறை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர்,** பேராதனைப் பல்கலைக்கழகம்

**திரு.எம்.என். ஜுனைட்,** தலைவர், தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

**திரு. காமினி முனசிங்க,** பணிப்பாளர், சுற்றாடல் மூலவளங்கள் ஊக்குவிப்பு முதலீடு பிஎல்சீ.

**கலாநிதி ஜயசிரி நுகவெல,** தலைவர், லிங்க் நசுரல் புரொடக்ட்

**கலாநிதி விக்கிரம வீரசூரிய,** இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி

**கற்கை சபை :** கற்கை சபையானது இவ்வாண்டுக்காலப்பிரிவில் பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டு அமைந்திருந்தது.

### வியாபார நிர்வாகத்தில் கற்கை சபை

**பேராசிரியர் உதித லியனகே,** பணிப்பாளர், மு.ப.நி. (தலைவர்)

**பேராசிரியர் சம்பத் அமரதுங்க,** பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம் யு.எஸ்.ஏ.

**பேராசிரியர் டேவிட் ஈவன்,** வருகை பேராசிரியர்

**பேராசிரியர் ஏர்ட்லி பெரேரா**, பணிப்பாளர், ஹியுமனி கெபிட்டல் பிஎல்சி

**கலாநிதி ட்ராவிஸ் பெரேரா,** சிரேஷ்ட உசாவுணர், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

**கலாநிதி விக்கிரம வீரசூரிய,** இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரி

**கலாநிதி ஜீ.சீ.பீ. விஜேசிங்க**, பட்டயக் கணக்காளர்

### பொது நிர்வாகத்தில் கற்கை சபை

**பேராசிரியர் உதித லியனகே,** பணிப்பாளர், மு.ப.நி. (தலைவர்)

**கலாநிதி எச்.எம்.பீ. ஹேரத்,** பொதுநிர்வாக திணைக்களம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**பேராசிரியர் எஸ்.டப்ளியூ. ரணசிங்க,** இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**கலாநிதி லொய்ட் பர்னாந்து,** நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர், எம்பிஏ நிகழ்ச்சித்திட்டம்

**திரு.லலித் வீரதுங்க,** ஜனாதிபதியின் செயலாளர்

**கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன**, ஜனாதிபதி சட்டத்தரணி

**பேராசிரியர் என்.எம். விக்கிரமஆரச்சி**, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

இவ்வாண்டுக் காலப் பிரிவில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகமானது முகாமைத்துவ சபையினால் 2009 - 2011 ஆம் ஆண்டுக்கான கூட்டாண்மை திட்டத்தின் அடிப்படையில் வழிப்படுத்தப்பட்டது. ஆராய்ச்சி, பட்டக் கற்கை பயிற்சி மற்றும் சேவைகள், புதிய கல்விசார் முன்னெடுப்புகள் போன்ற பிரதான துறைகளில் முழுதுமான பெறுபேறுகள் நிறுவகத்தின் சுயநிதியிடப்பட்ட அந்தஸ்துக்கான பேணுவதற்கான வருமான உழைப்பு என்பன ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றன.

## மாணவர் நுழைவு

| பாடநெறி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| வியாபார நிர்வாகத்தில் முதுமாணி | 201 |
| எம்பீஏ. சர்வதேச வர்த்தக மற்றும் பொருட்கொள்வனவு | 38 |
| **மொத்தம்** | **239** |

மேலே குறிப்பிடப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் இவ்வாண்டுக்காலப்பகுதியில் நடாத்தப்படுவதோடு நிகழ்ச்சித்திட்டத்தின் பாடநெறிக்கான துறையில் தற்போது ஏற்படுகின்ற போக்குகள் மற்றும் அறிவுத் துறைகள் இணைந்ததாக நிகழ்ச்சித் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டன.

**பீடத்தின் வளங்கள்:**

2011ஆம் ஆண்டுக் காலத்தில் சேவையாற்றிய நிரந்தர விரிவுரையாளர்கள், ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர்கள் மற்றும் சிறப்பு வருநர்கள்/தொழில்முறையாளர்கள் ஆகியோரைக் கொண்ட பீடத்தின் விரிவுரையாளர் குழாம் பின்வருமாறு:

**பேராசிரியர் உதித லியனகே**, டிப். எம்., எப்.சீ.ஐ.எம்., எம்.பீஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பணிப்பாளர், மு.ப.பி.நி.

**கலாநிதி ட்ராவிஸ் பெரேரா,** எம்.ஐ.ஈ.டீ. (யூ.கே.), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), சிரேஷ்ட ஆலோசகர்

**கலாநிதி ஏ.கே.எல். ஜயவர்தன**, பீ.ரெக். (சென்னை), எம்.பீஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (கென்பரா), சிரேஷ்ட ஆலோசகர்.

**கலாநிதி அஜந்த தர்மசிறி**, பீ.எஸ்.சீ. பொறி. (மொரட்டுவ), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), சிரேஷ்ட ஆலோசகர்

**திரு. சிசிர அதுரலியகே,** பீ.எஸ்.சீ. பௌதீ. விஞ்., (றுஹுணு), எம்.எஸ்.சீ. கணினி விஞ்., (கொழு.), ஆலோசகர்.

**பேராசிரியர் திலக் பொன்சேகா,** பீ.ஏ. (இலங்), எல்.எல்.பீ. (கொழு.), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), எம்.ஏ. (கொழு.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), சட்டத்தரணி

**பேராசிரியர் சுதத் ரணசிங்க**, பீ.பி.ஏ. (விட்யோ), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.), பீஎச்.டீ. (பீ.ஐ.எம்.-யு.எஸ்.ஜே.).

**கலாநிதி விக்கிரம வீரசூரிய,** எல்.எல்.பீ. (பேராதெனிய), பீ.எச்.டீ. (லண்டன்), சட்டத்தரணி

**கலாநிதி லொய்ட் பர்னாந்து,** எம்.எஸ்.சீ. (மொஸ்கோ), பீஎச்.டீ (சுசெக்ஸ்)

**கலாநிதி கால்டன் சமரஜிவா,** பீ.ஏ. (இலங்கை), பீ.ஈடீ, (குயீன்ஸ்), டிப். ஈடீ. (லண்டன்), டிப். ரீ.ஈ.எப்.எல்.

**பேராசிரியர் மங்கல பொன்சேகா,** பீ.எஸ்.சீ., எம்.பீ.ஏ. (கொழு.), எப்.சீ.எம்.ஏ. (யூ.கே.)

**திரு. வெலிங்டன் பியதாஸ,** எப்.சீ.எம்.ஏ, எப்.பீ.எப்.ஏ., பி.ஜீ., டிப்.எம்.பீ. (யு.சீ.டீ.), பீ.ஜி. டிப். எஸ்.சீ.எப். (ஐ.சீ.ஏ.எஸ்.எல்.), எம்.பீ.ஏ. (யு.சீ.டீ)

**திரு. என். நிர்மலன்,** எம்.பீ.எம். (யு.எஸ்.கியு), பீ.எஸ்.சீ. (சிறப்பு) கொம். அன் ஐஎஸ். (எல்.ஜீ.யு.) எம்.சீ.எஸ். (இலங்கை)

**திரு. ஹர்ஷ பர்னாந்து,** எல்.எல்.எம். (லண்டன்), எம்.பீ.ஏ. (நான்யாங்), சட்டத்தரணி

**திரு. கே.ஏ.ஐ. கல்யாணரத்ன,** பீ.ஏ. (இலங்), எம்.பீ.ஏ./எச்.ஆர்.எம். (பீ.ஐ.எம் – யு.எஸ்.ஜே.), ஏ.சீ.ஐ.ரீ. (யூ.கே.)

**பேராசிரியர் டேவிட் ஈவன்ஸ்,** பீ.ஏ. (சிறப்பு), எம்.எஸ்.சீ., டிப். ஈடீயு.

**திரு. மாரியோ பொன்சேகா,** எம்.சீ.ஐ.எம். (யூ.கே) எப்.எஸ்.சீ.எம்.ஏ., எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

**கலாநிதி பினலொப் ஹுட்,** டீ.எம்.எஸ். (ஈடீ), எம்.எஸ்.சீ (கல்வி முகா.), பீ.எச்.டீ.(ஆங்கிலியா)

**திரு. மபாஸ் இஸ்ஹாக்**, பீ.எஸ்.சீ. (பொறி), எம்.எஸ்.சீ. (பொரு.), எம்.எஸ்.சீ. (பொறி.), சீ.ஐ.எஸ்.ஏ

**திரு. சஞ்சீவ் ஜயரத்தினம்**, சீ.என்ஜி. எம்.பீ.சீ.எஸ்., பீ.எஸ்.சீ.(மான்செஸ்டர்), எம்பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

**திரு. திஸ்ஸ ஜயதிலக்க**, பீ.எ (கொழு.), எம்.ஏ. (வோக்), எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

**பேராசிரியார சதீஷ் சின்டே,** எம்.எஸ்.சீ., பீ.எச்.டீ. (பூனே)

**திரு. சேனகா வீரசூரிய**, பீ.எஸ்.சீ., (அனு.), எம்.ஐ.ரீ. (கென்பரா)

**திரு. சுனில் விஜேசிங்க,** எப்.சீ.எம்.ஏ., சி.என்ஜி., எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே)

**திரு. ரவி எதிரிசிங்க,** எம்.பீ.ஏ. (பீ.ஐ.எம். – யு.எஸ்ஜே), ஏ.சீ.எம்.ஏ. (யூ.கே.), எப்.எஸ்.சீ.எம்.ஏ.

**கலாநிதி அருள் சிவஞானநாதன்**, பீ.என்ஜி. (சிறப்பு) (லண்டன்), ஏ.எம்.ஐ.ஈ. (இலங்.), எப்.சீ.எம்.ஏ. (யு.கே.), எம்.பீ.ஏ. (கிரான்பீல்ட்), பீ.எச்.டீ. (யு.எஸ்.ஏ.)

கற்பித்தல் பீடமானது கலாநிதிப் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டப் படிப்பிற்கான மாணவர்களின் திறன் கருத்திட்டங்களையும் ஆய்வுப் பத்திரங்களையும் மேற்பார்வை செய்தல், மற்றும் பாடநெறியுடன் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல் போன்றவை தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது.

பட்டப்பின் படிப்பு, டிப்ளோமா மற்றும் சான்றிதழ் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களில் கல்விசார் பணியின் வெற்றியானது தர நியமங்கள், ஏற்புடைமை, மற்றும் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்கின்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் பிரகாரம் அமைந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் தரம் மற்றும் அவற்றின் நியமங்கள் பல்வேறு வழிமுறைகளில் நியாயப்படுத்தப்பட்டன. முதலாவதாக, ஒவ்வொரு கற்கை நிகழ்ச்சித் திட்டத்திலும் சிறப்புச் சித்தி பெறுகைகளின் எண்ணிக்கை கற்பித்தலிலுள்ள முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுவதாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. கல்விசார் பணியாட்தொகுதியினர் 2010 இல் 10

வீதமாகவிருந்த சிறப்புச் சித்தியின் அளவை 2011 இல் 12 வீதமாக அதிகரித்துப் பெறுவதற்கு கணிசமான பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளனர்.

இத்தகைய இலக்குகள் குறிப்பாக மாணவர்கள் வெளிக்காட்டிய அவர்களின் ஆய்வு மற்றும் கருத்திட்டப் பணிகள் ஆகியவற்றின் மூலமே அடையப்பட்டன.

கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான அவ்வப்போதைய மீளாய்வுகளுக்கு மேலாக, நிறுவகத்தினால் பொருந்திக் கொள்ளப்பட்ட தற்கால நடைமுறைகள் பற்றியும் மற்றும் நிறுவகத்தின் செயற்பாடுகளின் ஒவ்வொரு விடய மட்டங்களையும் மேம்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் வெளிப்படையாக கலந்தாராயும் வகையிலான பீடத்தின் நடவடிக்கை ஸ்தம்பிதங்களும் வருடாந்தம் இடம்பெற்றன. இது நிறுவகத்தின் உள்ளக முறைமையினை தரமுயர்த்துவதில் மிகவும் பயனுடையதாகவிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, பிரதானமாக எம்.பீ.ஏ. மற்றும் அதன் வரிசையிலான ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளிலும் பயனுடையதாக அமைந்தது.

**கல்வி சாரா பணியாட்தொகுதியினர் :** நிறுவகமானது இவ்வாண்டுக்காலத்தில் 22 முழுநேர ஊழியர்களைக் கொண்டிருந்தது. துப்பரவாக்கல் சேவைகள், தூய்மையாக்கம், பாதுகாப்பு மற்றும் உணவு வழங்கல் போன்ற வசதிகள் வெளித்தரப்பினரிடமிருந்து பெறப்பட்டன.

| பீடம்/கிளை | மிகவும் சிரேஷ்ட நபர்கள் | சிரேஷ்ட பணியாளர்கள் | கனிஷ்ட பணியாளர்கள் | சிற்றூழியர்கள் |
|---|---|---|---|---|
| நிர்வாகம் மற்றும் கல்வித்துறை சார் விவகாரங்கள் | 01 | 02 | 04 | 04 |
| தகவல் தொழில்நுட்ப மையம் | 01 | 02 | - | - |
| நூலகம் | 01 | 03 | - | - |
| பணிப்பாளர் அலுவலகம் | 01 | - | - | - |
| நிதி | 01 | - | 02 | - |
| மொத்தம் | 22 | | | |

**ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் :**

| விடயம் | வெளியிடப்பட்டவை | விற்பனைக்கிடப்பட்டவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| எம்.பீ.ஏ. மாணவர்களின் ஆய்வுகளின் எண்ணிக்கை | -- | -- | 260 |
| இதழ்களின் எண்ணிக்கை | 04 | 04 | 04 |
| புத்தகங்களின் எண்ணிக்கை | 02 | 02 | 02 |
| ஆக்கங்களின் எண்ணிக்கை (அச்சிலுள்ளவை) | 30 | (தினசரி பத்திரிகையில் வெளியானவை) | 30 |
| மொத்தம் | 36 | 06 | 296 |

இலங்கையில் முகாமைத்துவம் சார்ந்த ஆய்வானது சற்று ஆரம்ப கட்ட நிலையில் உள்ளதென்றே கூறமுடியும். நாங்கள் இன்னமும் கட்டுப்பாட்டு சம்பிரதாயம் சார்ந்ததொரு ஆய்வினை விருத்திசெய்யும் போக்கிலுள்ள அதேவேளை, உண்மையான சவாலானது எங்களுடைய பாரிய ஆய்வுப் பிரயத்தனங்களை ஒழுங்குபடுத்தக்கூடிய, ஊக்குவிக்கக்கூடிய முன்னுதாரணமொன்றைக் கண்டுகொள்ள வேண்டியதாகவுள்ளது. எனவே, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பிற்கான நிறுவகமானது ஆய்வு தொடர்பாக அவற்றை தரமுயர்த்தும் முறைகள் மற்றும் தர்க்க ரீதியான அணுகுமுறைகள் போன்றவற்றுக்கான வழிமுறைகளை பெறும் முயற்சியிலுள்ளது. எனவே, உள்ளீடுகளின் தரமானது பொருத்தமான மட்டங்களுக்கு மேல்நோக்கி நகர்த்தப்பட முடியும். மேலும் நிறுவகத்தின் ஆய்வு தொடர்பான முன்னெடுப்பானது இலங்கையரின் அறிவின் பின்னணியிலுள்ள பாரிய இடைவெளிக்கான தீர்வாக அமையுமென்பதோடு, சமூக ரீதியாக “அறிவார்ந்த” சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வழிவகுக்கும்.

நிறுவகத்தின் காலாண்டு வெளியீடான ‘இலங்கையரின் முகாமைத்துவப் பத்திரிகை’ (SLJM) ஆனது 1996 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு, ஏனைய

ஆக்கங்களையும் கலந்தாராய்வுகளையும் தொடர்ந்தும் வழங்கிவருகிறது. முகாமைத்துவத்திலுள்ள கடினத்தன்மைகள், நடைமுறைகள் மற்றும் அபிவிருத்திகள் போன்றவற்றுக்கானதொரு செய்தி ஊடகத்தை வழங்குவதும், மற்றும் ஆய்வு, கற்கைகளின் பலாபலன்களை வெளியிடுவதுமே இப்பத்திரிகையின் பிரதான நோக்கமாகும். இப்பத்திரிகையில் கல்விமான்களும் மற்றும் அனுபவமிக்கோரும் முகாமைத்துவம் தொடர்பான தமது அக்கங்களை வெளியிடுவதற்கும் அனுமதிக்கப்படுகிறது.

இது தவிர, ஒரு ஆண்டில் இரு முறை பிரசுரமாகின்ற 'தொழில்முறை முகாமையாளர்' சஞ்சிகையானது நவீன கால முகாமையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு விருந்தாக அமையும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இச்சஞ்சிகையினை சந்தையில் அறிமுகம் செய்வதற்கான நோக்கம், புரிந்துகொள்வதற்கு இலகுவானதொரு பாணியில் தற்கால நவீன முகாமைத்துவ அறிவினை பரப்புவதாகும். இதற்கு ஒரு குறிப்பான தொழிற்பாட்டுச் சார்புநிலை இல்லை, ஆனால் இது இக்கட்டான, கொந்தளிப்பான சூழலொன்றில் செயற்படுகின்ற நவீன முறையிலான முகாமையாளருக்குரிய தற்கால விடயம் சார்ந்த மற்றும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடைய சிக்கல்களுக்கு தீர்வினை வழங்குகிறது எனலாம்.

**நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் :**

| விடயம் | கலந்துகொண்டோர் | நிறைவுத்தன்மை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| கூட்டுறவுத் துறையினருக்கான முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | அனைவரும் | பூர்த்தி | 06 |
| எம்.பீ.ஏ. மாணவர்களுக்கான செயலமர்வு | அனைவரும் | பூர்த்தி | 04 |
| பீட உறுப்பினர்களுக்கான செயலமர்வு | அனைத்து கல்விசார் பணியாளர்கள் | பூர்த்தி | 01 |
| மொத்தம் | | | 11 |

**புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள்:**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பிற்கான நிறுவகம், சுங்க மற்றும் கலால் வரி தொடர்பான கற்கை நிலையம், கென்பெரா பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருட்கொள்வனவிலான வணிக நிர்வாக முதுமானி பாடநெறியொன்றை வடிவமைத்துள்ளனர். சர்வதேச வர்த்தகமானது, கூட்டான

மற்றும் தனியான மட்டங்களிலான போட்டியை மேம்படுத்துவதற்கானதொரு தேவையைக் கொண்டுள்ள நவீன கால பொருளியலில் பிரதானமானதொரு அம்சமாகவுள்ளது.

நிகழ்ச்சித் திட்டத்தின் பாடவிதானமானது சம்பந்தப்பட்ட துறையின் விரிவான தேவைகளுக்கான தீர்வினை வழங்கும் அதேவேளை தேவையான அறிவு மற்றும் ஆற்றல்களை வழங்கும் நோக்கோடு, சர்வதேச வர்த்தகம் மற்றும் பொருட் கொள்வனவுகள் தொடர்பிலான பிரதான மூலங்களைக் கொண்டுள்ளது.

மேலும், இது சர்வதேச வர்த்தகம் மற்றும் வாணிபம் தொடர்பில் நன்மதிப்பினையுடைய மாணவர்களை வளர்ச்சிமிகு பாதையில் இட்டுச்செல்லும் வகையிலும், மற்றும் பொருட்கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் விநியோகத் தொடர்ச் செயற்பாடுகள் போன்றன தொடர்பில் ஆழமாக புரிந்துகொள்ளும் வகையிலும் வடிவமைக்கப்பட்டதாகும். மேற்கொள்ளப்படவுள்ள அத்தகைய நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சட்ட வரையறையானது தெளிவாகவும் முழுமையாகவும் நிகழ்ச்சித் திட்டத்தில் விபரிக்கப்படும்.

இவ்வாண்டுக்காலத்தில் புதிய வகுப்பில் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் 38 மாணவர்கள் இணைந்துள்ளனர்.

**மீண்டெழும் செலவினம் :**

| | 2009 (ரூபா) | 2010 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| தனி நபர் ஊதியம் | 18,647,494 | 19,243,443 | 24,133,316 |
| பிரயாணம் | 1,099,928 | 1,681,218 | 3,115,621 |
| விநியோகம் | 4,529,871 | 6,028,785 | 5,353,740 |
| பராமரிப்பு | 1,096,764 | 3,150,345 | 4,120,723 |
| ஒப்பந்தம் செய்துகொண்ட சேவைகள் | 12,066,360 | 13,625,720 | 14,572,852 |
| ஏனையவை | 21,501,812 | 24,304,280 | 18,588,791 |
| கருத்திட்டத் தன்மைச் செலவினம் | 6,042,526 | 15,224,206 | 20,827,188 |
| மொத்தச் செலவினம் | 64,984,755 | 83,257,997 | 90,712,231 |

மூலதனச் செலவினம் :

| விடய விபரம் | 2009 (ரூபா) | 2010 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் கையகப்படுத்தல் | 1,778,108 | 4,785,565 | 3,229,540 |
| பொறித்தொகுதிகள் கையகப்படுத்தல் | - | 38,915 | - |
| கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் கையகப்படுத்தல் | - | - | - |
| ஏனையவை (நூலக புத்தகங்கள், மோட்டார் வாகனம், பட்டமளிப்பு ஆடை) | 385,397 | 1,474,784 | 10,073,420 |
| காணி மற்றும் கட்டிடங்களின் புனர்நிர்மாணம் மற்றும் புத்தாக்கம் | 2,851,066 | 7,845,552 | 3,243,526 |
| மொத்தம் | 5,014,571 | 14,144,816 | 16,546,486 |

கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியளிப்பு)

| பெயரும் விபரமும் | கடன் / கொடை | நிதியளிப்பு முகராண்மை≠ | ரீ.சீ.ஈ. ரூபா. | ஆர்.எப்.ஏ. ரூபா. | டீ.எப். ரூபா. |
|---|---|---|---|---|---|
| அரசாங்க பிரதம புத்தாக்க அதிகாரிகளுக்கான ஈ-அரசாங்கம் மீதான பயிற்சியளிப்பு தொடர்பான அபிவிருத்தி, திட்டமிடுகை மற்றும் வழங்கல்களுக்கான ஆலோசனைச் சேவைகள் | கொடையளிப்பு (WB) | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகராண்மை | 21,190,000 | | |
| மொத்தம் | | | | | |

கருத்திட்ட செலவு (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியளிப்பு):

| பெயர் | ரீ.சீ.ஈ. ரூபா. | 2010 இல் செலவு ரூபா. | 2011 இல் செலவு ரூபா. | 2011.12.31 இலுள்ளவாறு திரட்டிய செலவு | பௌதீக முன்னேற்ற வீதம் |
|---|---|---|---|---|---|
| பிரதம புத்தாக்க அதிகாரிகளுக்கான பயிற்சித் திட்டம் | 21,190,000 | 5,257,655 | 7,825,952 | 13,083,607 | (அண்ணளவானது) |
| மொத்தம் | | | | | |

நிதிசார் முன்னேற்றம் (செலவினம்):

| விடயம் | 2011 இலான ஏற்பாடு ரூபா. | 2011இலான செலவு ரூபா. | சேமிப்புகள்/ மிகைகள் ரூபா. |
|---|---|---|---|
| கருததிட்டம் தவிர்ந்த மீண்டெழும் செலவு | 85,346,000 | 90,712,231 | (5,366,231) |
| கருத்திட்டம் தவிர்ந்த முதலீடு | 19,300,000 | 16,546,486 | 2,753,514 |
| கருத்திட்டம் - உள்நாட்டு நிதியளிப்பு | - | - | - |
| கருத்திட்டம் - வெளிநாட் நிதியளிப்பு | 7,825,952 | 7,825,952 | - |
| மொத்தம் | | | |

நிதிசார் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமானம்):

| வருமான மூலம் | 2011 இலான ஏற்பாடு ரூபா. | 2011 இலான சேகரிப்பு ரூபா. | பற்றாக்குறை/ மிகை ரூபா. |
|---|---|---|---|
| இளநிலைப் பட்டப்படிப்பு கற்கை | - | - | - |
| பட்டப்பின் படிப்புக் கற்கை | 74,700,000 | 53,907,639 | (20,792,361) |
| ஆலோசனைகள் | 4,500,000 | 4,693,850 | 193,850 |
| ஏனையவை | 23,240,000 | 40,990,436 | 17,750,436 |
| மொத்தம் | 102,440,000 | 99,591,925 | (2,848,075) |

## நிதிசார் செயலாற்றுகை தொடர்பான பகுப்பாய்வு– 2011 :

இவ்வாண்டுக் காலத்தில் , நிறுவகமானது அரசாங்க நிதி மூலங்களிலிருந்தான எந்த நிதிகளை யும் (மீண்டெழும் செலவுக்காக) பெறவில்லை. இது 1997 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவகத்தின் சொந்தமான நிதியிடல் கொள்கையினை தொடர்ந்தும் பேணிவரும் நிலையை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாண்டு முதல், முகாமைத்துவ பட்டப்பின் படிப்புக்கான நிறுவகமானது அதன் மீண்டெழும் செல வுக்காக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிடமிருந்தோ அல்லது திறை சேரியிடமிருந்தோ எந்த நிதிகளை யும் பெற்றிருக்கவில்லை.

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவருக்கான செலவு – ரூபாவில். |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (மீ.செ.) | மீ.செ. / மாணவர் எண்ணிக்கை | 140,639 |
| ஒரு மாணவருக்கான மூலதனச் செலவினம் (மூ.செ.) | மூ.செ. / மாணவர் எண்ணிக்கை | 25,653 |
| மொத்தம் | | |

## 2011 இல் பெறப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் :

பௌதீக பயிற்சி நிலையம் - மிக முக்கிய விடயமான பணி-வாழ்க்கை-கற்கை இடையிலான நேரச் சமநிலையினை, நிறுவகத்தில் பாடநெறிகளை /நிகழ்ச்சித் திட்டங்களை பின்பற்றுகின்ற பல மாணவர்களால் எதிர்கொள்ள முடிவதில்லை. உடல் ஆரோக்கியம் பேணுகையில் புறக்கணிப்புடன் நடந்துகொள்வதன் விளைவினாலேயே மன அழுத்தம் மற்றும் சுகயீனம் ஆகியன அடிக்கடி இடம்பெறுகின்றன. இந்த நிலையமானது இந்நோக்கம் தொ டர்பில் அனுகூலமான பலனை அடைவதில் உத வுகின்றது. இந்நிலையமானது அனேக பல வசதிகள் மற்றும் கருவிகளைக் கொண்டு மேலும் விருத்திசெய்யப்படவுள்ளது.

முடிவு

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகமும் மற்றும் அதன் பிரதான நிகழ்ச்சித் திட்டத்தின் எம்.பீ.ஏ. பாடநெறியும் வள ர்ந்துவரும் போட்டிக்கு மத்தியில் பல ஆண்டுகளாக அதனை எதி ர்கொள்ளும் போட்டித் திறனுடன் காணப்பட்டுள்ளது. பொருந்துமை மற்றும் தரம் ஆகியன வெற்றிக்கான இரண்டு காரணிகளாகும். MBA/MPA யினை நிறுவகத்தின் பிரதான நிகழ்ச்சித்திட்டமாகத் தெரிவுசெய்து அவை தொடர்பான செயற்பாட்டு பிரதேசத்தின் முன்னேற்றத்தை தொட ர்ந்தும் பேணுவதற்கான நிறுவகத்தின் பிரயத்தனமாக வுள்ள அதேவேளை, விசேடமாக தனியார்த்துறையினரிடமிருந்தான வாடிக்கையாளர்களின் குறிப்பான பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமா ன, நி றுவகத்தின் பலதரப்பட்ட நிறைவேற்றுத்தர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் பாரிய அவதானத்தையும் செலுத்திவருகிறது.

பீடத்தின் வளங்களிலான தரம் மற்றும் அள வு போன்றவற்றின் மேம்பாட்டுடனான உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது மேற்படி கற்கைத் திட்டங்களுக்கான வாய்ப்பினை வழங்குவதோடு , திட்டமிட்டபடி பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

பேராசிரியர் உதித லியனகே
பணிப்பாளர்
முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகம்
2012 டிசம்பர் 04
www.pim.lk

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகம்
## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
## வருமானக் கூற்று
## 2011 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

| விபரங்கள் | 2010 (ரூபா) | | 2011 (ரூபா) | |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| முதலீடுகளிலிருந்தான வட்டி | 5,494,782.42 | | 6,973,047.52 | |
| கடன்கள், முற்பணங்களிலிருந்தான வட்டி | 127,747.58 | | 90,750.52 | |
| ஆதனங்களிலிருந்தான வாடகை | 3,359,717.00 | | 7,029,890.00 | |
| பழைய சேமிப்புகள் விற்பனை | 31,150.00 | | 15,450.00 | |
| இதர பற்றுச்சீட்டுக்கள் | 5,571,143.79 | | 4,311,061.72 | |
| பதிவுக் கட்டணங்கள் (பட்டப்பின் படிப்பு) | 136,500.00 | | 162,000.00 | |
| பிரத்தியேக வகுப்புக் கட்டணங்கள் (பட்டப்பின் படிப்பு) | 109,843,545.69 | | 53,907,638.72 | |
| பரீட்சைக் கட்டணங்கள் (பட்டப்பின் படிப்பு) | 300,000.00 | | 267,000.00 | |
| தொழில்முறை முகாமையாளர் சஞ்சிகை | 19,350.00 | | - | |
| கல்வி மற்றும் தொழில்முறை ஆக்கங்கள் | 268,878.00 | | - | |
| புத்தகங்கள் விற்பனை | 147,400.00 | | 22,880.00 | |
| இலங்கை நுகர்வோரின் விவரக்குறிபாக்கம் | 35,700.00 | | - | |
| சீ.ஐ.ஓ. நிகழ்ச்சித் திட்டம் | - | | 7,825,952.10 | |
| வெளியீடுகள் விற்பனை | 1,130,195.00 | | 1,163,325.00 | |
| நூலக அபராதம் மற்றும் கட்டணம் | 83,110.00 | | 304,580.00 | |
| வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சேவைகள் | 4,937,100.00 | | 4,693,850.00 | |
| எம்.பீ.ஏ. நிகழ்ச்சித்திட்ட கட்டணம் | 8,327,000.00 | | 6,229,500.00 | |
| சா்வதேச நிகழ்ச்சித் திட்டம் | 3,647,501.72 | | - | |
| மோட்டார் வாகனம் விற்பனை | - | | 1,065,000.00 | |
| விண்ணப்பங்களுக்கான அறவீடு | | | 690,500.00 | |
| பட்டமளிப்புக்கான அறவீடு | 12,500.00 | | 4,839,500.00 | |
| **மொத்த வருமானம்** | | **143,473,321.20** | | **99,591,925.58** |
| | | | | |
| **செலவு** | | | | |
| பொதுவான நிர்வாக மற்றும் பணியாட்தொகுதியினர் சேவைகள் | 33,697,483.39 | | 37,692,954.01 | |
| கல்வி தொடர்பான சேவைகள் | 19,103,846.11 | | 27,543,635.60 | |
| கற்பித்தல் வளங்கள் | 1,556,976.02 | | 2,267,353.94 | |
| துணைச் செயற்பாடுகள் | 1,585,748.25 | | 2,381,098.79 | |
| வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சேவைகள் | 4,585,340.50 | | 4,325,803.00 | |
| எம்.பீ.ஏ. நிகழ்ச்சித் திட்டம் | 4,149,959.20 | | 6,045,948.00 | |
| சா்வதேச நிகழ்ச்சித் திட்டம் | 5,505,030.72 | | - | |
| சீ.ஐ.ஓ. நிகழ்ச்சித் திட்டம் | - | | 7,825,952.10 | |
| இதர பணக் கொடுப்பனவுகள் | - | | 201,337.79 | |
| நிறுவகத்தின் வெளியீடுகளுக்கான செலவு | 2,120,622.10 | | 2,428,147.88 | |
| **மொத்தச் செலவு** | | **(72,305,006.29)** | | **(90,712,231.11)** |
| | | | | |
| **தேய்மானத்திற்கு முன்னரான மிகைகள்** | | 71,168,314.91 | | 8,879,694.47 |
| தேய்மானத்திற்கு முன்னர் | | | | |
| | | | | |
| தேய்மானம் | | (12,089,683.81) | | (9,927,896.26) |
| தேய்மானத்திற்குப் பின்னரான மிகைகள் | | 59,078,631.10 | | (1,048,201.79) |

* தயவுசெய்து பின்னிணைப்பு I ஐ பார்க்கவும்

| | | |
|---|---|---|
| பேராசிரியர் உதித லியனகே<br>பணிப்பாளர் | ஜே.கே.எஸ். ரணபுர<br>உதவிப் பதிவாளர் | பி.ஜி. மைத்திரியேரத்ன<br>பிரதிப் பொருளாளர் |

நிறுவகத்தின் பிரதான வருமானம் (பிரத்தியேக வகுப்பு மூலமான அறவீடு) இவ்வாண்டுக்காலம் முழுவதும் பணத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தவறானது பண அடிப்படையை திரட்டு அடிப்படைக்கு மாற்றியதன் மூலம் சரிசெய்யப்பட்டது. இம்மாற்றத்தின் மூலம் நிதிச் செயற்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் பின்வருமாறு,

| | 2010 | | 2011 |
|---|---|---|---|
| சரியாக்கத்திற்கு முன்னரான மிகை/ பற்றாக்குறை | 59,078,631.10 | | 35,464,085.89 |
| **சீராக்கல்கள்** | | | |
| முன்னைய ஆண்டில் பெறப்பட்ட நடைமுறை ஆண்டுக்கான வருமானம் | 11,810,000.00 | | 27,573,712.32 |
| | 70,888,631.10 | | 63,037,798.21 |
| முன்னதாகப் பெறப்பட்ட வருமானம் | (27,573,712.32) | | (64,086,000.00) |
| சரியாக்கத்திற்குப் பின்னரான மிகை/ பற்றாக்குறை | 43,314,918.78 | | (1,048,201.79) |

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகம்
## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
## நிதி நிலைப்பாடு பற்றிய கூற்று
## 2011 டிசம்பர் 31 இலுள்ளவாறானது

| விபரங்கள் | 2010 | | குறிப்பு | 2011 | |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | | இல. | ரூபா. | |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| காணியும் கட்டிடங்களும் | 42,560,924.62 | | | 41,676,358.55 | |
| ஆய்வகம், கற்பித்தல் உபகரணங்கள் | 8,856,796.64 | | | 8,329,734.94 | |
| நூலக புத்தகங்கள் பருவகால வெளியீடுகள் | 2,684,631.88 | | | 5,093,523.33 | |
| மோட்டார் வாகனங்கள் | 2,545,052.93 | | | 7,107,164.53 | |
| பட்டம் கௌரவிப்பு மேலங்கி | 320,543.00 | | | 925,382.00 | |
| அலுவலக தளபாடங்கள், பொருத்தல்கள் | 611,294.34 | | | 501,711.64 | |
| அலுவலக உபகரணங்கள் | 9,437,534.92 | | | 9,379,998.34 | |
| பொறித்தொகுதி, இயந்திரம் | 54,615.00 | | | 35,023.50 | |
| | | 66,430,307.33 | 1 | | 73,048,896.83 |
| | | 90,448,690.00 | 2 | | 101,375,290.00 |
| முதலீடு | | 156,878,997.33 | | | 174,424,186.83 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| கையிருப்புக்கள் | 825,418.80 | | 3 | 1,800,186.64 | |
| சர்வதேச ரீதியான நிகழ்ச்சித்திட்டம் | 832,912.00 | | | 1,641,000.00 | |
| சில்லறைக் கடன் பெற்றோர்-நாணாவிதமானது | 1,802,337.79 | | 4 | 2,297,378.61 | |
| பணியாளர் கடன்கள், முற்கொடுப்பனவுகள் | 2,482,566.00 | | 5 | - | |
| நாணாவித முற்கொடுப்பனவு | 42,688.50 | | | 148,014.25 | |
| முற்கொடுப்பனவு | 20,516.75 | | 6 | 5,249,850.99 | |
| ஏனையவை | 2,805,760.66 | | 7 | 36,697,932.65 | |
| வங்கி | 14,706,254.25 | 23,518,803.75 | | - | 47,834,363.14 |
| கையிலுள்ள பணம் | 349.00 | 180,397,801.08 | | 47,834,363.14 | 222,258,549.97 |
| மொத்தச் சொத்துக்கள் | | | | | |

| | | |
|---|---|---|
| பேராசிரியர் உதித லியனகே | ஜே.கே.எஸ். ரணபுர | பி.ஜி. மைத்திரியேரத்ன |
| பணிப்பாளர் | உதவிப் பதிவாளர் | பிரதிப் பொருளாளர் |

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகம்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
## நிதி நிலைப்பாடு பற்றிய கூற்று
## 2011 டிசம்பர் 31 இலுள்ளவாறானது

| விபரங்கள் | 2010<br>ரூபா. | குறிப்பு<br>இல. | 2011<br>ரூபா. |
|---|---|---|---|
| **சமவுடமைப் பங்கு மற்றும் பொறுப்புடைமை மூலதனம்** | | | |
| முதலீட்டுக் கொடைச் செலவு | 166,986,089.57 | | 166,986,089.57 |
| | | | |
| **ஒதுக்கங்கள்** | | | |
| நிறுவகத்தின் பொதுவான ஒதுக்கம் | (16,935,807.23) | | (45,092,300.52) |
| நன்கொடை ஒதுக்கம் | 2,036,493.97 | | 2,036,493.97 |
| | | | |
| **வரையறை கொண்ட நிதிகள்** | | | |
| அறக்கொடையளிப்பு | 306,603.74 | 8 | 339,354.74 |
| சீ.ஐ.ஓ. கருத்திட்ட நிதி | | | 5,457,640.82 |
| | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 7,564,523.00 | 9 | 7,342,067.00 |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| முன்னதாகப் பெறப்பட்ட வருமானம் | - | | 64,086,000.00 |
| சில்லறைக் கடன் கொடுத்தோர் | 10,538,133.62 | 10 | 9,676,443.06 |
| வைப்புக்கள் | 4,085,684.44 | 11 | 2,458,393.61 |
| செலவுக் கடன் கொடுத்தோர் | 5,360,655.88 | 12 | 6,074,418.63 |
| ஏனையவை | 245,5424.09 | 13 | 2,893,949.09 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 180,397,801.08 | | 222,258,549.97 |

| பேராசிரியர் உதித லியனகே | ஜே.கே.எஸ். ரணபுர | பி.ஜி. மைத்திரியேரத்ன |
|---|---|---|
| பணிப்பாளர் | உதவிப் பதிவாளர் | பிரதிப் பொருளாளர் |

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகம்
## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
## விசாரணையிலான மாற்றங்கள் பற்றிய கூற்று
## 2011 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

| | முதலீடு | பொதுவான ஒதுக்கம் | நன்கொடை ஒதுக்கம் | மொத்த சமவுடமைப் பங்குகள் |
|---|---|---|---|---|
| 2009 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி | 143,742,531.00 | (44,904,308.35) | 1,593,842.00 | 100,432,064.65 |
| சீராக்கம் | 23,243,558.57 | (33,110,129.98) | - | (9,866,571.41) |
| மீளக்கூறப்பட்ட மீதி | 166,986,089.57 | (78,014,438.33) | 1,593,842.00 | 90,565,493.24 |
| யு.என்.டி.பி. கருத்திட்டம் | - | - | 442,651.97 | 442,651.97 |
| மிகை | - | 59,078,631.10 | - | 59,078,631.10 |
| 2010 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி | 166,986,089.57 | (18,935,807.23) | 2,036,493.97 | 150,086,776.31 |
| சீராக்கம் | - | (25,108,291.50) | - | (25,108,291.50) |
| மீளக்கூறப்பட்ட மீதி | 166,986,089.57 | (44,044,098.73) | 2,036,493.97 | 124,978,484.81 |
| மிகை | - | (1,048,201.79) | - | (1,048,201.79) |
| 2011 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி | **166,986,089.57** | **(45,092,300.52)** | **2,036,493.97** | **123,930,283.02** |
| | | | | |

பேராசிரியர் உதித லியனகே
பணிப்பாளர்

ஜே.கே.எஸ். ரணபுர
உதவிப் பதிவாளர்

பி.ஜி. மைத்திரியேரத்ன
பிரதிப் பொருளாளர்

## முகாமைத்துவ பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகம்
## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
## விசாரணையிலான மாற்றங்கள் பற்றிய கூற்று
## 2011 டிசம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டுக்கானது

| 2010 (ரூபா) | தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள் | 2011 (ரூபா) |
|---|---|---|
| 59,078,631.10 | சாதாரண செயற்பாடுகளிலிருந்தான மிகை | (1,048,201.79) |
| | | |
| | காசற்ற அசைவுகளும் ஏனைய சீராக்கல்களும் | |
| 12,089,683.81 | தேய்மானம் | 9,927,896.26 |
| 521,380.00 | பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 998,065.00 |
| - | கடன் மற்றும் முற்பணங்களிலிருந்தான வட்டி | (36,997.06) |
| - | வாகனங்களின் விற்பனை | (1,065,000.00) |
| (5,494,782.42) | மூலதனத்திலிருந்தான வட்டி | (6,973,047.52) |
| 83,760.17 | முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | - |
| **66,278,672.66** | **முதலீட்டுப் பணி மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | **1,802,714.89** |
| (475,806.80) | கையிருப்புக்களிலான அதிகரிப்பு | (141,855.84) |
| 619,930.00 | சில்லறைக் கடன் வழங்குனரிலான அதிகரிப்பு | 296,073.40 |
| 509,662.50 | நாணாவித முற்பணத்திலான குறைவு | 42,688.50 |
| 60,975.25 | முற்பணத்திலான குறைவு | (127,497.50) |
| - | சில்லறைக் கடன் பெறுநர்களிலான குறைவு | 161,337.79 |
| - | பணிக்கொடையிலான குறைவு | (431,812.50) |
| - | கடன் மற்றும் முற்பணத்திலிருந்தான வட்டிக் குறைவு | 36,997.06 |
| - | ஏனையவற்றிலான (சொத்துக்கள்) அதிகரிப்பு | (2,444,090.33) |
| 446,119.00 | வைப்பாளர்களிலான குறைவு | (1,627,290.83) |
| (1,023,659.12) | அட்டுறுச் செலவுகளிலான அதிகரிப்பு | 713,762.75 |
| - | முற்பணத்தில் பெறப்பட்ட வருமானம் | 64,086,000.00 |
| 1,141,283.45 | ஏனையவற்றிலான (பொறுப்புகள்) அதிகரிப்பு | 438,525.00 |
| **1,278,504.28** | **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான நிகர காசுப்பாய்ச்சல்கள்** | **61,002,837.50** |
| | **மூலதனச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | |
| (7,555,815.59) | காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு | (3,243,526.00) |
| (1,546,940.00) | ஆய்வக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவு | (1,257,910.00) |
| (1,474,784.00) | நூலக புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் கொள்வனவு | (3,074,619.64) |
| - | பட்டம் கௌரவிப்பு மேலங்கி கொள்வனவு | (1,248,800.00) |
| - | மோட்டார் வாகனம் கொள்வனவு | (5,750,000.00) |
| (3,316,454.94) | அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | 1,971,630.12 |
| - | வாகனம் விற்பனை | 1,065,000.00 |
| - | கடன் மற்றும் முற்பணங்களிலான குறைவு | 185,187.39 |
| 38,915.00 | பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு | - |
| (54,000,000.00) | பணம் முதலீடுகள் | (10,926,600.00) |
| 3,365,451.48 | முதலீடுகளிலிருந்தான வட்டி | 6,973,047.52 |
| **(64,489,628.05)** | **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான நிகர காசுப்பாய்ச்சல்கள்** | **(19,249,850.85)** |
| | **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | |
| - | பொதுவான ஒதுக்கம் | (25,897,000.00) |
| - | சீ.ஐ.ஒ. கருத்திட்ட நிதி | 5,457,640.82 |
| 32,750.74 | அறக்கொடையளிப்பு | 32,751.00 |
| (1,073,691.38) | வாகனம் குத்தகை | (1,157,763.96) |
| (1,040,940.64) | **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான நிகர காசுப்பாய்ச்சல்கள்** | **(21,564,372.14)** |
| | | |
| 2,026,608.25 | காசு மற்றும் காசுக்குச் சமமாவைகளிலான நிகர அதிகரிப்பு | 21,991,329.40 |
| 12,679,995.00 | காலப்பகுதிக்கு முன்னதாகவிருந்த காசும் காசுக்குச் சமமானவையும் | 14,706,603.25 |
| **14,706,603.25** | காலப்பகுதியின் நிறைவிலிருந்த காசும் காசுக்குச் சமமானவையும் | **36,697,932.65** |

| | | |
|---|---|---|
| பேராசிரியர் உதித லியனகே<br>பணிப்பாளர் | ஜே.கே.எஸ். ரணபுர<br>உதவிப் பதிவாளர் | பி.ஜி. மைத்திரியேரத்ன<br>பிரதிப் பொருளாளர் |

குறிப்பு 01

## நிலையான சொத்துக்கள் - 2011

(ரூபா.)

| விபரங்கள் | 2011.01.01 இலான மீதி | 2011 இற்கான கொள்வனவு | 2011.12.31 இல் மொத்த மீதி | 2011.01.01 இலான தேய்மானம் | 2011 இல் தேய்மானம் | மொத்த தேய்மானம் | நிகர பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்களின் புனர்நிர்மாணம் மற்றும் புத்தாக்கம் | 21,945,630.26 | 3,243,526.00 | 25,189,156.26 | 2,866,453.89 | 1,097,281.51 | 3,963,735.40 | 21,225,420.86 |
| அலுவலக தளபாடம் மற்றும் உபகரணம் | 20,709,199.65 | 523,097.62 | 21,232,297.27 | 15,591,322.87 | 59,339.90 | 15,650,662.77 | 5,581,634.50 |
| ஆய்வக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 23,874,015.31 | 1,257,910.00 | 25,131,925.31 | 15,017,218.67 | 1,784,971.70 | 16,802,190.37 | 8,329,734.94 |
| நூலக புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் | 16,958,065.25 | 3,074,619.64 | 20,032,684.89 | 14,273,433.37 | 665,728.19 | 14,939,161.56 | 5,093,523.33 |
| மோட்டார் வாகனம் - கழிக்கப்பட்ட மோட்டார் வாகனம் | 9,547,117.00 | 5,750,000.00 | 15,297,117.00<br>(2,600,000.00) | 7,002,064.07 | 1,187,888.40 | 8,189,952.47<br>(2,600,000.00) | 7,107,164.53 |
| ------ | 825,727.00 | 1,248,800.00 | 2,074,527.00 | 1,146,270.00 | 2,875.00 | 1,149,145.00 | 925,382.00 |
| அலுவலக தளபாடமும் பொருத்துகைகளும் | 2,872,377.04 | 177,655.00 | 3,050,032.04 | 2,261,082.70 | 287,237.70 | 2,548,320.40 | 501,711.64 |
| அலுவலக உபகரணங்கள் | 14,765,439.73 | 1,270,877.50 | 16,036,317.23 | 10,445,781.59 | 1,792,171.80 | 12,237,953.39 | 3,798,363.84 |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 195,915.00 | | 195,915.00 | 141,300.00 | 19,591.50 | 160,891.50 | 35,023.50 |
| கட்டிடம் நிர்மாணம் | 60,616,211.37 | | 60,616,211.37 | 42,134,463.12 | 3,030,810.56 | 45,165,273.68 | 15,450,937.69 |
| காணி | 5,000,000.00 | | 5,000,000.00 | | | 118,207,286.54 | 5,000,000.00 |
| மொத்தம் | 177,309,697.61 | 16,546,485.76 | 191,256,183.37 | 110,879,390.28 | 9,927,869.26 | | 73,048,896.83 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / துலைவா / My No: சீஈ/ஈ/பிஜஎம் /எப்ஏ/2011

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2012 யூன் 11

பணிப்பாளர்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம்

**ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகள் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் சட்டமாக்கப்பட்ட 1985 இன் 3 ஆம் இலக்க முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவக கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) மற்றும் 111 ஆம் பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2012 மார்ச் 27 ஆம் திகதி வழங்கப்பட்டது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக் கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை

மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 29 இன் பிரகாரம் நிறுவகத்தினால் அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் இனங்காணப்பட்டு திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், 2010/2012 அரச நிகழ்ச்சித் திட்டத்திற்காக CIO (Chief Innovation officer) உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் பட்டபின் படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2011 ஆம் ஆண்டின் பாட நெறிக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 10,806,899 ஆல் வருடத்திற்கான வருமானம் இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்குப் பதிலாக ஓர் அடிப்படை இன்றி ஆண்டின் செலவினமான ரூபா 7,825,952 இற்குச் சமனான ஒரு தொகை வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இன் பிரகாரம் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட போதிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 49,158,132 கிரயமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அப் பெறுமதி கணக்கிடப்படபட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட ரூபா 6,393,536 தொகையான கணக்கீட்டு குறைபாடுகள் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர்களுக்கு 2012 மார்ச் 27 ஆம் திகதிய முகாமைத்துவ அறிக்கையின் மூலம் அனுப்பிவைக்கப்பட்டதுடன் அக் குறைபாடுகள் சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2007 ஆம் ஆண்டில் சேவையில் இருந்து விலகிச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் ரூபா 95,097 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவினமாகிய ரூபா 6,074,419 தொகையில் 2006 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் இனங்காணப்படாத ரூபா 690,668 தொகையும் சர்வதேச கிளையில் வகைப்படுத்தப்படாது அட்டுறு செலவினம் ரூபா 3,743,217 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சர்வதேசக் கிளையில் ரூபா 2,911,912 தொகையான பெறவேண்டிய கணக்குகளும் ரூபா 11,603,207 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளும் 3 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அம் மீதிகளின் உள்ளமையானது மீதிகளின் உறுதிப்படுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் பெறுமதி ரூபா 5,000,000 ஆகக் காட்டப்பட்டிருந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் உறுதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், சுற்றுநிருபங்கள், நிதிப் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் (உ.இ.ஆ) ஐஆர் டீ/பீரவைஈ/ஆர்ஈஜீ/01 ஆம் இலக்க மற்றும் 2011 மார்ச் 7 ஆம் திகதிய கடிதம் | நிரந்தர ஊழியர்களின் இலாபம் முறையாகப் கணக்கிடப்பட்டிராமையால் 12 உத்தியோகத்தர்களுக்கான ரூபா 624,112 தொகையான வரி குறைவாக அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்த ரூபா 136,104,213 தொகையான வருமானத்தின் அடிப்படையில் ரூபா 2,722,084 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டில் போது உழைக்கப்பட்டிருந்த ரூபா 136,104,213 தொகையான வருமானத்தின் அடிப்படையில் ரூபா 340,260 தொகையான பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 756 | நிறுவகத்தினால் பொருள் இருப்புப் பதிவேடு பேணப்பட்டிராததுடன் வருடாந்த |

|  |  |
|---|---|
|  | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) 2006 ஜனவரி 25 ஆம் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 3.4 ஆம் பிரிவு | விலைமனு கோரல்கள் இன்றி 2008 ஆம் ஆண்டு முதல் போட்டோ பிரதி சேவை மற்றும் எழுதுகருவி விற்பனை நிலையம் நடாத்தப்படுவதற்காக நிறுவன வளவில் ஒரு பகுதி வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. |

### 2.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1985 இன் 3 ஆம் இலக்க முகாமைத்துவம் தொடர்பான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் கட்டளைச்சட்டத்தின் 8(iii) (ஐ) இன் பிரகாரம் நிறுவகத்தின் எப்பணத்தினையும் முதலீடு செய்வதற்கும் அத்தகைய முதலீட்டில் மாற்றம் செய்வதற்கும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 35 மில்லியனை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கும் அத்துடன் ரூபா 6 மில்லியனை நிலையான வைப்பிலிருந்து மீளுவதற்கும் அவசியாமான உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 1,048,201 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 59,078,631 ஆகக் காண்பிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 60,126,832 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இதற்குப் பிரதான காரணமாக மீளாய்வாண்டிலிருந்து அட்டுறு அடிப்படையில் வருமானம்

இனங்காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 44 மில்லியனால் குறைவடைந்து சராசரி நிர்வாக மற்றும் கல்விசார் பதவியணியினர் செலவினம் ரூபா 12 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் பதிவு செய்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை 415 ஆகும். நிறுவகத்தினால் 9 பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக 438 மாணவர்களுக்கு 2011 ஆம் ஆண்டில் பட்டம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 06 முகாமைத்துவ ஆலோசனைச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்தன.

### 4.2 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

வங்கி நடைமுறைக் கணக்குகளின் மீளாய்வாண்டின் போது (ஒக்டோபர் மாதத்தினைத் தவிர்த்து) ரூபா 9 மில்லியன் முதல் ரூபா 30 மில்லியன் வரையான மீதி காணப்பட்டதுடன் இம்மிகை நிதியினை முதலீடு செய்து வருமானத்தை உழைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் கடமையாற்றிய பிரதி பொருளாளர் 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதி முதல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் தமது நிறுவகத்திற்கு சேவை வழங்காது 06 மாத காலத்திற்காக (2010 செப்தெம்பர் மாதம் முதல் 2011 பெப்ரவரி வரை) சம்பளமாக ரூபா 315,235 செலுத்தப்பட்டிருந்தது.

5. கணக்களி தகைமையும் நல்ஆளுகையும்

5.1 கூட்டுத்திட்டம்

2009/2011 கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராத நிறுவகக் கட்டிடத்தில் II ஆம் கட்டத்தின் செலவினத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒதுக்கப்பட்ட ரூபா 15 மில்லியன் தொகையான ஏற்பாடு உள்ளடங்கலாக 2011 பாதீட்டின் மூலம் ரூபா 60 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்டவாறு கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

2011 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 216.10 ஆம் இலக்க முகாமைத்துவ சபைப் பத்திரத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வு நடவடிக்கைகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உதவி கணக்காய்வாளர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.3 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு ஆண்டில் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 கொள்வனவுத் திட்டம்

நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் 04 செலவின விடயங்களை வருடாந்த செலவின மதிப்பீட்டுடன் ஒப்பிடப்படுகையில் 38% முதல் 207% வரையான அளவால் முரண்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு மீதான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கணக்கீடு

(இ) இருப்பு ஏடுகளைப் பேணல்

(ஈ) பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Ms/v*

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13(7) (அ) மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 108 (2) என்பவற்றின் பிரகாரம் 2011 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக, பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு தராதரங்கள்

(அ) e-அரசாங்க நிகழ்ச்சித்திட்டதின் கீழ் நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 21.2 மில்லியன் கருத்திட்ட நிதியத்தின் கீழ் 2010/2012 CIOO (பிரதம புத்தாக்க அலுவலர்களின்) பயிற்சிக்கான டிப்ளோமா பாடநெறி நடாத்தப்படுகின்றது. அதன்வண்ணம் 2011 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற தொகை ரூபா 10,806,899.00. ஆகும். 2011 ஆம் ஆண்டின் இறுதியளவில் கருத்திட்ட செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிக்கவில்லை என்பதனால் தொகையில் மிகையொன்று கிடைக்கப்பெற்றிருக்கின்றது என்பதை அடையாளங்காண்பது சிரமமாக இருந்தது. நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான தகவல்கள் பிரதிபலிக்கப்படாமல் இருப்பதை தவிர்ப்பதற்கு செலவுகளுக்கு சமமான தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் வருமானமொன்றாக காட்டப்பட்டிருக்கின்றது. கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் முடிவடையவுள்ளதால் வருமானம் மீதான செலவில் மிகையொன்று இருப்பின் கணக்குகளில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) முற்றாக தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட்டதாக காட்டப்பட்டிருக்கின்ற ஆனால் தற்போது பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும் என்பதோடு எதிர்காலத்தில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கங்கள் பதிவுசெய்யப்படும்.

### 2.2.3 பெறத்தக்க மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

(அ) ரூபா 124957.00, முற்பணங்களில் ரூபா 38310.00 சேவையிலுள்ள ஒரு ஊழியரிடமிருந்து மீட்டப்படவுள்ள நிலுவையாகும். சேவையை விட்டுச்சென்ற இரண்டு ஊழியர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய கடனொன்றிலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 86647.00 அவர்களது சேமலாப நிதிய நன்மைகள் விடுவிக்கப்படுகின்ற போது மீட்டுக்கொள்ளப்படும்.

2012 ஆம் ஆண்டில் இல் வருமானத்திற்கு அடையாளங்காணப்படாத அட்டுறு செலவினங்களில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது சர்வதேச கிளையின் வகைபிரிக்கப்படாத அட்டுறு செலவினங்களின் விபரங்களை அதன் செயற்பாடுகள் பற்றிய விசாரணைகள் பூாத்திசெய்யப்படும் வரை பெற்றுக்கொள்வது சாத்தியமானதாக இல்லை.

### 2.2.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

(அ) சர்வதேச கிளையின் ஐந்தொகைக்கு ஏற்ப 2009.03.31 ஆம் திகதியில் உள்ளவாறான பெறவேண்டிய , செலுத்தவேண்டிய நிலுவைகள் நிதிசார் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டு காட்டப்பட்டிருக்கின்றன. சர்வதேச கிளையின் செயற்பாடுகள் குறித்து நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்து பொருத்தமான தகவல்கள் பெறப்பட முடியும் என நம்பப்படுகின்றது.

(ஆ) சொத்தின் உரிமையான்மையை உறுதிப்படுத்துவதற்கு காணிப் பதிவிலிருந்து பொருத்தமான காணி உறுதியின் பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இயைந்து செல்லாமை

(அ) நீங்கள் உழைக்கின்றவாறு செலுத்துங்கள் என்ற அடிப்படையில் அரச நிறுவனங்களிலிருந்து வரிகளை அறவிடுவதானது 2011 ஏப்பிரல் 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமானது. வரி அறவிடத்தக்க ஆண்டின் முதல் சில மாதங்களில் வரிகளின் தொகை

தீர்மானிக்கப்பட்டதற்கும் சுற்றுநிருப அறிவுருத்தல்களுக்குமிடையே முரண்பாடொன்று காணப்பட்டதால் ரூபா 624112.00 தொகையொன்று குறைவாக அனுப்பப்பட்டிருக்கின்றது. ஆதலால் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து அந்த தொகையை குறைப்பதற்கும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) ஒரு அரசாங்க திணைக்களம், அமைச்சு அல்லது அரசாங்கத்தினால் முற்றாக உரித்தாக்கப்பட்ட நிறுவனமொன்றினால் சேவைகள் வழங்கப்பட்டபோதிலும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரி சுற்றுநிருபம் (திருத்தப்பட்ட ) வரிகளின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தவை செலுத்தப்படவில்லை, உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து ஆலோசனை கோரப்பட்டபோது அரசாங்க கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட சபைகளும் தேசத்தை கட்டியெழுப்பும் வரியிலிருந்து விதிவிலக்களிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. ஆதலால் கோவையொன்றை திறப்பதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஏற்கெனவே விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

(இ) பொருளாதார சேவை கட்டணங்களின் கொடுப்பனவிற்காக வரிக் கோவையொன்றறை திறப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஈ) சொத்து பொருட்பட்டியல் இடாப்பின் தயாரிப்புக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு பொருட்பட்டியல் ஆய்வு சபையொன்று ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருக்கின்றது.

(உ) நிறுவகத்தில் விரிவுரைகள் பி.ப.06.00 – பி.ப 10.00 வரை நடாத்தப்படுகின்றன. இந்த நேரங்களில் மாணவர்களுக்கு அவற்றின் குறிப்புகளின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்காக நிறுவகத்திற்கு வெளியயே பிரதி எடுக்கும் சேவை நிலையமொன்றை நடாத்திவருக்கின்ற நபரொருவரின் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு இந்நேரத்தில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது. இதற்காக அவர் தனது சுயமான இயந்திரத்தை பயன்படுத்தகின்றார். இது ஒரு குறுகிய நேர ஒரு மணித்தியால சேவையாக இருப்பதாலும் சிறுதொகை வருமானத்தை ஈட்டக்கூடிய செயற்பாடாக இருப்பாலும் கேள்விப்பத்திரங்களை கோருவது நடைமுறைசாத்தியமானதாக தோன்றவில்லை. எவ்வாறாயினும் இந்த பிரதியெடுத்தல் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 2012 ஆம் ஆண்டில் கேள்விப்பத்திரங்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.6 போதிய உத்தியோகபூர்வ அதிகாரத்தை உறுதிப்படுத்தாத கொடுக்கல்வாங்கல்கள்

(அ) முகாமைத்துவ சபை மாதாந்தம் கூடாததன் காரணமாக முதலீடுகளும் வைப்புகளிலிருந்து பெறுகைகளும் முகாமைத்துவ சபையின் காப்பு அங்கீகாரத்தை வைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இது 2012 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் முகாமைத்துவ சபையின் முதலாவது கூட்டத்தில் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

4.2 பயன்படுத்தப்படாத, குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

நிறுவனத்தினால் பெறப்பட்ட வருமானத்தின் அளவை கருத்திற்கொண்டும் ஏற்பட்ட செலவுகளின் மிகை நிதியங்கள் திரவத்தன்மை விடயங்களை கருத்திற்கொள்ளாது முதலீடுசெய்யப்பட்டிருக்கின்றன. மீளாய்வின் கீழான ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் ரூபா 15 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது.

4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புடைய காலப்பகுதியின் கீழ் பிரதிப் பொருளாளர் 07.09.2010 திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வண்ணம் முகாமைத்துவ சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் அடிப்படையில் ஒழுக்காற்று காரணங்களுக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்டதோடு அவரக்கு ஒரு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஒழுக்காற்று விசாரைணயின் இறுதியில் முடிவொன்று எடுக்கப்படும் வரை நிறுவனத்தினால் அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் முகாமைத்துவ சபை குறிப்பிட்ட பிரதி பொருளாளரினால் வினவப்பட்டவாறு இறுதிச்சேவை நீடிப்புக்கு அங்கீகாரம் வழங்கவில்லை, அவரது சம்பளம் 2011 பெப்ரவரி வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

5. பொறுப்புக்கூறுதன்மையும், சிறந்த ஆளுகையும்.

5.1 கூட்டாண்மைத்திட்டம்

2012 ஆம் ஆண்டில் நிறுவகக் கட்டிடத்தின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அமைச்சரவையின் அங்கீகாரத்தை

பெற்றுக்கொள்வதற்காக பிரேரணை உயர் கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. கட்டட கருத்திட்டத்தை பூர்த்திசெய்வதற்காக நிறுவகத்தினால் உழைக்கப்பட்ட நிதியை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.2 உள்ளக கணக்காய்வு

2011 ஆகஸ்டில் தனது சம்பளத்துடனான விடுமுறையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரதி பொருளாளரின் சேவைகளை பெறுவதில் தாமதமொன்று காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் கணக்காய்வு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டமொன்று தொடர்புடைய ஆண்டின் கீழான காலப்பகுதியில் நடாத்தப்பட்டதோடு எதிர்காலத்தில் இந்த கூட்டங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5.4 பொருட்கொள்வனவுத் திட்டம்

குறைவான பொருட்கொள்வனவு செயற்பாடுகளின் குறைவான மட்டங்கள் காரணமாக 2011 ஆம் ஆண்டிற்கு பொருட்கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லையாயினும் 2012 ஆம் ஆண்டுக்கான பொருட்கொள்வனவு திட்டம் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு ஒதுக்கங்கள் தொடர்பில் சில செலவு நிலையங்களில் காணப்படக்கூடியதான வேறுபாடொன்றை தோற்றுவிக்கக்கூடிய எதிர்பாராத, அவசர நிலைமைகளினால் நிகழ்ந்துள்ளது. எதிர்காலத்தில் இந்த வேறுபாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.